520

வெளியீடு-௧௬௨.

1324

தமிழ்ப் பாட புத்தகங்கள்

மூன்றும் புத்தகம்

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
22 JUL 1938
MADRAS

சென்னை
பாடசாலைகளின் டெப்டி இன்ஸ்பெக்டர்
திரு. சிவசைலம் பிள்ளை, எம்.ஏ., எல்.டி.
எழுதியது.

[Approved by the
Madras Text-Book Committee for class use
Vide Consolidated List p. 168 dated 4-5-37]

THE SOUTH INDIA SAIVA SIDDHANTA
WORKS PUBLISHING SOCIETY,
TINNEVELLY, LTD.,
TINNEVELLY & MADRAS.

ALL RIGHTS RESERVED

PRICE AS. 4½

5

கழக வெளியீடு-கசஉ

சீர்திருத்திய வரிசைத்

தமிழ்ப்பாட புத்தகங்கள்

மூன்றும் புத்தகம்

OFFICE OF THE REGISTRA... BOOKS
22 JUL 1938
MADRA

பாடசாலைகளின் டெப்டி இன்ஸ்பெக்டர்,

திரு. சிவசைலம் பிள்ளை, எம். ஏ., எல். டி.,

எழுதியது.

:: திருநெல்வேலி, தென்னிந்திய ::

சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட்,

திருநெல்வேலி & சென்னை

வெகுதானிய-ஆனி

4th Edition June 1934
5th Edition June 1935
6th Edition May 1938

DEDICATED

To The Memory of One
to whom the right training
of children
was the sole occupation in life.

(Copyright)

முன்னுரை

இவ்வரிசையிலுள்ள புத்தகங்கள், கையெழுத்துப் பிரதியிலேயே பிள்ளைகளுக்குக் கற்பிக்கப்பட்டு, அவர்களுக்கு ஏற்றவை என்று கண்டுதெளிந்த பாடங்களாலேயே தொகுக்கப் பெற்றவையாகும்.

சிறுவர்களுடைய அறிவைப் பெருக்கும் வண்ணம் பாடங்கள், தாவரங்கள், பிராணிகள், பறவைகள், இயற்கைத் தோற்றங்கள், இயற்கை அற்புதங்கள், விவசாயம், கைத்தொழில், சுகாதாரம், நம் உடலின் அமைப்பு, அரசியல் முதலிய பல துறைகளில் இருந்தும் எடுக்கப் பெற்றுள்ளன.

இவைகளிற் பல இளைஞர்கள் மனதைக் கவரத்தக்கனவாய்க் கதைகளாகவும், இன்னிசைப் பாக்களாகவும், சம்பாஷணைகளாகவும், நாடகங்களாகவும் எழுதப்பட்டுள்ளன.

நம் நாட்டுப்புறங்கள் வறுமைப்பிணியில் நின்று நீங்கி, செல்வத்தில் ஓங்கி வளர்ந்து, பல நலமும் பெற்று, முன்னேற்றம் அடைதல் நமக்கு இப்போது இன்றியமையாத தாகும்.

இப்பேரவா இளமைதொட்டே சிறுவர்களுடைய மனதில் குடிகொள்ளும் வண்ணம், விவசாயத்தின் பெருமையையும், கைத்தொழில்களின் சிறப்பையும், நாட்டுப்புறங்களை இனிமைபெறச் செய்யும் வழிகளையும் விளக்கும் பாடங்கள் பல இப் புத்தகங்களில் சேர்க்கப்பெற்றிருக்கின்றன.

நம் தாய்நாட்டின்மீதும், தமிழ் மொழியினிடத்தும், அன்பைப் பெருக்கும் நம் புலவர்கள், பக்தர்கள், வேந்தர், வீரர் முதலிய பெருமக்களின் வரலாறுகளும் கதைகளும் இடை இடையே அமைக்கப்பட்டிருக்கின்றன.

இன்னும், நீதி போதனைகளும், கடவுள் பக்தியினைப் புகட்டும் வாழ்த்துப்பாக்களும், எல்லாச் சமயத்தினரிடத்தும் சகோதரப் பான்மையை விளைவிப்பனவாய் அந்தந்த மதங்களின் பெருமையை விளக்கும் பாடங்களும் இப்புத்தகங்களில் எழுதப்பட்டுள்ளன.

திரு. சிவ.

பொருள் அடக்கம்

பாடம்		பக்கம்
1.	கடவுளின் மகிமை	7
2.	எருது	10
3.	வாழை	13
4.	பறவையும் உலகமும்	16
5.	பற்கள் I	18
6.	பற்கள் II	20
7.	குயவன்	23
8.	எறும்பும் புறாவும்	27
	,, (பாட்டு)	30
9.	மாலை நேரம்	32
10	கதிரவனும் சிறுவனும்	35
11.	காகம்	37
12.	திருக் கார்த்திகை	41
13.	சின்னஞ் சிறிய செடி	44
14.	நாய்	45
15.	நாயின் நன்றி அறிவு I	49
16.	நாயின் நன்றி அறிவு II	52
17.	குப்பன் சீரானது	56
18.	தென்னை	58
19.	தென்னையின் உபயோகம்	61
20.	நபிநாள் பண்டிகை	64
21.	மலை தூக்கி	69

பாடம்		பக்கம்
22.	தபால்	70
23.	கடிதம் எழுதுதல்	73
24.	தபாலாபீசு	76
25.	சுந்தரமூர்த்தி நாயனர் I	80
26.	சுந்தரமூர்த்தி நாயனர் II	83
27.	நம் தாய் நாடு	86
	,, (பாட்டு)	88
28.	படைவீரர்	89
29.	கடவுள் வாழ்த்துப் பாக்கள்	92
30.	கோன்றைவேந்தன்	95

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
22 JUL 1938
MADRAS

மூன்றும் புத்தகம்

---

1. கடவுளின் மகிமை

ஒருநாள் மாலை கமலமும் கந்தனும் அவர்கள் தந்தையுடன் ஊருக்கு அப்பால் ஒரு புல் வெளியில் உட்கார்ந்து கொண்டிருந்தனர். அப்போது கந்தனின் கண்கள் அருகிலுள்ள சிறு பூண்டுகளின் மீது வீழ்ந்தன.

கந்தன்—அக்கா, இதோ பார்! இப் பூண்டுகள் எவ்வளவு சிறியவை! ஆனால் அவைகளின் பூக்கள் எவ்வளவு அழகாய் இருக்கின்றன! ஒவ்வொன்றும் ஒவ்வொரு நிறம்!

கமலம்—ஆம்! இவை சிவப்பு. அவை மஞ்சள். அதோ அப்பாவின் பக்கம் இருப்பவை நீலம். இங்கே உன் பின்னால் இருப்பவை வெள்ளை.

தந்தை—இதோ பாருங்கள், கிளிகள் கூட்டம் கூட்டமாய்ப் பறந்து செல்கின்றன!

கந்தன்—ஆ! அவை எவ்வளவு அழகு!

கமலம்—அதோ! இரண்டு மயில்கள்!

கந்தன்—தோகையைத் தூக்கிக் கொண்டு எவ்வளவு அழகாய் அசைந்து அசைந்து நடக்கின்றன!

கமலம்—ஐயோ! புதருக்குப் பின்னல் மறைந்து விட்டனவே!

கந்தன்—(எழுந்து நின்றும் மறைந்த மயில்களைக் காணமுடியாமல், தந்தையை நோக்கித் திரும்பி) அப்பா, இப் பறவைகளுக்கு இவ்வளவு அழகும், இப் பூக்களுக்கு இத்தனை நிறங்களும் எப்படிக் கிடைத்தன? இவைகளைக் கொடுத்தவர் யார்?

தந்தை—நீங்களே யோசித்துச் சொல்லுங்கள்.

கமலம்—அவைகளைப் படைத்த கடவுள்.

தந்தை—ஆம். இப் பூக்களுக்கு இத்தனை அழகு மிகுந்த நிறங்களையும், அவைகளில் சிலவற்றிற்கு அழகுடன் மணத்தையும், இப் பறவைகளுக்கு நம் கண்களைக் கவரும் வனப்பையும், அவைகளில் சிலவற்றிற்கு நமது மனதை மகிழ்விக்கும் இனிய குரலையும் கொடுத்தவர் அவைகளைப் படைத்த கடவுளே. அக் கடவுளே இப் புல் பூண்டுகளையும், மரம் செடி கொடிகளையும், நாட்டிலும் காட்டிலும் வசிக்கும் விலங்கினங்களையும், நீரில் வாழும் மீன்களையும், ஆகாயத்தில் பறக்கும் பறவைகளையும், நம்மையும், இவ்வுலகில் உள்ள எல்லா உயிர்களையும் படைத்தார்.

கந்தன்—அப்படியானல் அவரது வல்லமை எவ்வளவு பெரிதாக இருக்கவேண்டும்!

கமலம்—அவர் எல்லாம் செய்ய வல்லவர். அவருக்கு முடியாதது ஒன்றும் இல்லை.

தந்தை—அது மாத்திரம் அல்ல: அவர் அன்பு நிறைந்தவர். எல்லா உயிர்களுக்கும் உண்ண உணவு கொடுத்துக் காப்பவரும் அவரே. சுவாசிக்கக் காற்று இல்லாமலும், குடிக்கத் தண்ணீர் இல்லாமலும் நாம் சிறிது நேரமாவது உயிருடன் இருக்க முடியுமா? அவ்வளவு இன்றியமையாத வாயுவை உலகம் எங்கும் நிரப்பிவைப்பவர் யார்? அவ்வளவு அவசியமான தண்ணீரை மழையாகப் பொழிவித்து ஆறுகளிலும், ஏரிகளிலும், குளங்களிலும், கிணறுகளிலும் பெருக்கி வைப்பவர் யார்? அவர் கருணை நிறைந்த கடவுளே. மற்றும் நாம் குளிரிலும் இருளிலும் உயிர் வாழ முடியுமா? இவ்விரண்டையும் போக்கி நமக்கு வெப்பமும் வெளிச்சமும் கொடுக்கச் சூரியனையும் சந்திரனையும் எண்ணிறந்த நட்சத்திரங்களையும் படைத்தவரும் அவரே.

கமலம்—கடவுளின் வல்லமையைப் போல அவரது கருணையும் அளவற்றதே!

தந்தை—ஆம். குழந்தைகளே! அவரது அன்பின் திறத்தை நீங்கள் ஒருபோதும் மறக்காதீர்கள்!

கமலமும் கந்தனும்—அப்பா! அதை நாங்கள் ஒருநாளும் மறக்கமாட்டோம்.



2. எருது

பிள்ளைகளே! நீங்கள் பசுவைப் பற்றிப்படித்திருக்கிறீர்கள். மாடுகளில் பெண் இனம் பசு எனப்படும். ஆண் இனம் காளை அல்லது எருது எனப்படும். பசுவைப்போலவே எருதும் மனிதருக்குப் பல விதங்களில் உபயோக முள்ள பிராணி. அதனால் மனிதர் அதையும் வீடுகளில் வளர்க்கிறார்கள்.

2. எருதின் முன்தோற்றம் பார்வைக்கு அழகாய் இருக்கும். பரந்து நீண்ட முகமும், கறுத்த நாசியும் வாயும், பக்கங்களில் பருத்த கருங் கண்களும், நீண்ட காதுகளும், உச்சியில் கூரிய கொம்புகளும் அதற்கு மிகுந்த அழகைத் தருகின்றன. இக் கொம்புகள் இளங்கன்றுக்கு இரா. கன்று வளர வளர அவைகளும்

முளைத்து வளரும். இக் கொம்புகளால் எருது தன்னைத் தொந்தரவு செய்யவரும் மனிதரையும் பிராணிகளையும் முட்டி ஓட்டும்.

3. எருதின் கழுத்து மேல் பாகத்தில் பருத்துத் தடித்து இருக்கும். கீழ்ப்பாகத்தில் தாடைத் தோல் நெடுக வளர்ந்து அழகாய் மடிந்துமடிந்து தொங்கும். கழுத்தை அடுத்து எருதினுடைய முதுகில் ஒரு சதை முண்டு தோன்றும். அதற்குத் திமில் என்று பெயர். எருதின் வால் நீளமானது. அதன் நுனியில் மயிர் கொத்தாக இருக்கும். இவ் வால் எருதிற்குக் கை போல் உதவுகிறது. அதனுல் அது தன்மேல் வந்து உட்காரும் ஈ கொசுகு முதலியவற்றை ஓட்டிக் கொள்ளும். எருதின் உடல் பருத்து இருக்கும். அதன் கால்களின் நுனியில் குளம்புகள் இருபிளவாய் இருக்கின்றன.

4. பசுவைப் போலவே எருதும் புல் வைக்கோல் முதலியவற்றைத் தின்னும். குடியானவர்கள் எருதுகளை மிக அன்பாக வளர்க்கிருர்கள். காலையில் அவைகளைத் தேய்த்துக் குளிப்பாட்டித் தீனி போடுவார்கள். மாலையில் தண்ணீர் தெளித்துப் பிசைந்த தவிடு, பிண்ணுக்கு, வேகவைத்த கொள்ளு, உரலில் போட்டு ஆட்டிய பருத்தி விதை முதலியவற்றை அவைகளுக்குக் கொடுப்பார்கள். தாகம் உண்டாகும்போது குடிப்பதற்குத் தொட்டியில் தண்ணீர் ஊற்றி அருகில்

வைப்பார்கள். சிறுவர்கள் தாங்கள் தின்னும் பழங்களையும் பண்டங்களையும் மாடுகளுக்குக் கொடுத்து அவைகளும் தம்மைப் போலவே அவற்றைத் தின்பதைக்காண ஆசைப்படுவார்கள்.

5. எருதுகள் மனிதருக்குப் பலவிதங்களில் உழைக்கின்றன. குடியானவர்களுக்கு அவை இன்றியமையாதவை. அவை அவர்களுடைய நிலங்களை உழுது பண்படுத்திக் கொடுக்கின்றன. தோட்டப் பயிர்கள் தண்ணீர் இல்லாமல் வாடும்போது கிணறுகளிலிருந்து கவலையில் தண்ணீர் இறைத்துச் செடிகளைச் செழிக்கச் செய்கின்றன. மற்றும் எருதுகள் பார வண்டிகளையும் சவாரி வண்டிகளையும் இழுத்துச் செல்லும். வண்டிகளின் போக்கு வரவிற்குப் பாதை இல்லாத சில இடங்களில் அவை முதுகின் மேல் பொதிகளைச் சுமந்துசெல்லுகின்றன. செக்குகளில்நமக்குஎண்ணெய் ஆட்டிக்கொடுப்பவைகளும் அவைகளே.

6. எருது நமக்கு இத்தனைவகைகளில் உதவி செய்து கொடுப்பதற்கு நன்றி பாராட்டக் கருதியே நம் முன்னோர்கள் அதனைச் சிவபெருமான் வாகனம் என்று வைத்தார்கள் போலும். தைமாதம் பொங்கல் பண்டிகைக்கு அடுத்த நாள் மாட்டுப் பொங்கல் இட்டுப் பசுக்களையும் எருதுகளையும் கொண்டாடுவதும் இதனாலேயே என்றும் நினைக்கலாம்.



3. வாழை

வாழை சூடான நாடுகளில் வளரும் மரங்களில் ஒன்று. அதற்குத் தண்ணீரும் ஏராளமாய் வேண்டும். ஆகையால் அதை நமது தேசத்தில் வயல்களிலும் இறைவைக் கிணறுகள் உள்ள தோட்டங்களிலும் வைத்துப் பயிர் செய்கிறார்கள்.

2. நீங்கள் அது பயிர் ஆகும் விதத்தைக் கவனித்து இருக்கிறீர்களா? வாழைக்கு விதை கிடையாது. ஆனால் அதன் அடியில் மண்ணுக்குள் சென்று இருக்கும் கிழங்கிலிருந்து பக்கக்

கன்றுகள் வெடித்து நிலத்தைப் பிளந்துகொண்டு வரும். இக் கன்றுகளையே பெயர்த்து எடுத்துப் பயிர் செய்யவேண்டும். சற்று ஆழமாகக் குழிகள் தோண்டி அவைகளில் கொஞ்சம் உரம் இட்டு வாழைக் கன்றுகளை வைத்துத் தண்ணீர் பாய்ச்சு வார்கள். அவை முதலில் குருத்துவிடும். குருத்து பருத்து விரிந்து பெரிய இலை ஆகும். இப்படி ஒன்றின்பின் ஒன்றாய் இலைகள் விட்டுக்கொண்டு அவை வளரும்.

3. வாழை மரத்தில் கிளைகளைப் பார்த்து இருக்கிறீர்களா? அதற்குக் கிளை கிடையாது. பட்டைகளும் இலைகளுமே உண்டு. இப்பட்டை கள் ஒன்றின்மே லொன்றாய்த் தண்டைச் சுற்றி மூடிக்கொண்டு இருக்கும். வாழை இலைகளின் நடு வில் பள்ளமாய் முதுகில் தடித்துக் காணப்படும் நரம்புகள் இலைகளைப் பட்டைகளுடன் சேர்க்-கின்றன.

4. வைத்து ஆறு முதல் பத்து மாதங்களில் வாழை கடைசியாக ஒரு சிறிய இலை விடும். அதைக் கண்ணாடி இலை என்று சொல்லுவார்கள். அதன் பிறகு வாழை குலை தள்ளும். பச்சை இலை-களின் இடையே சிவந்த பூவுடன் குலை வளைந்து தொங்குவது பார்வைக்கு வெகு அழகாய் இருக்-கும். பூவிலிருந்து நாள்தோறும் சிலமடல்கள்விரி-யும். உள்ளே சீப்புச் சீப்பாய்ச் சிறு பிஞ்சுகள்

காணப்படும். இவை பருத்துக் காயாகும். காய் முதிர்ந்ததும் பசுமை நிறம் மாறி மஞ்சள் நிறம்கொண்டு பழுக்கும். குலை முற்றியவுடன் வாழையை வெட்டிவிடுவார்கள்.

5. வாழை நமக்கு மிகவும் உபயோகமானது. அதன் காயும் பூவும் தண்டும் கறி சமைத்து உண்ண உதவும். பழத்தைத் தின்னலாம். தெய்வத்தை வணங்கும்போது தேங்காயோடு வாழைப் பழத்தையும் வைப்பார்கள். கோயில்களில் திருவிழாக் காலங்களிலும் வீடுகளில் நல்ல காரியங்களை நடத்தும்போதும் பிள்ளைகளுக்கு வாழைப்பழம் கொடுப்பார்கள். அவைகளை வாங்கித் தின்னப் பிள்ளைகள் "எனக்கு, எனக்கு" என்று முந்துவார்கள்.

6. வாழை இலை சோறு வைத்துச் சாப்பிடுவதற்கு மிகவும் ஏற்றது. உலர்ந்த இலைகளையும் தொன்னைகளாகத் தைத்து உண்கலங்களாக உபயோகிப்பார்கள். நீங்கள் தொன்னையில் பாயசம் ஊற்றிக் குடித்திருக்கிறீர்களா? திருவிழா, திருமணம் முதலிய மங்களகரமான நாட்களில் அலங்காரத்திற்காகக் குலையோடு கூடிய வாழைகளைப் பந்தற்கால்களில் கட்டுவார்கள். வாழை நார் பூத்தொடுப்பதற்கு உதவும். அதிலிருந்து ஒரு விதப் பட்டு ஆடையும் செய்கிறார்கள்.

7. வாழைகளில் மொந்தன், பூவன், பேயன், கதலி, ரஸ்தாளி, செவ்வாழை, பச்சை வாழை, மலை வாழை எனப்பல வகைகள் உண்டு. அவைகளில் பேயன், ரஸ்தாளி, செவ்வாழை, பச்சை வாழை, மலை வாழைப் பழங்கள் தின்பதற்கு மிகவும் இனிமையாய் இருக்கும்.



4. பறவையும், உலகமும்

1. கேளுங்கள் பாலர்களே !—நானும்
கிடந்த பொழுது ஒரு முட்டையி னுள்ளே

2. வட்ட வடிவமான — சிற்றுருண்டை
வழு வழுப்பான வெள்ளை ஓடு என்றே

3. உலகத்தை மதித்திருந்தேன்—பிறகு நான்
உந்நதமுள்ள சிறு கூட்டிலிருந்தேன்.

4. அப்போது இந்த உலகம்—புல்லாலே
ஆகி ஒரு தாயுடனே அமைந்த தென்றே

5. உள்ளத்தில் மகிழ்ச்சிகொண்டேன்—மெல்ல
ஒரு கிளை மறு கிளை தாவிப் பறக்க [நான்

6. இறக்கையும் முளைத்த உடன்—ஓ, ஓ !
இலை கிளை நிறைந்ததே உலகமென்றேன்.

7. ஆகாயம் அளவும் இப்போ—உயரத்தில்
ஆநந்தமாய்ப் பறக்க அறிந்த உடன்

8. உலகமோ மிகப்பெரிதாய்—உண்மை ஒன்றும்
உணர முடியாமல் விரிந்த தென்னே !

---

5. பற்கள் I

ஒரு நாள் கமலம் ஒரு கண்ணாடியைக் கையில் எடுத்து, தன் முகத்தைப் பார்த்து மகிழ்ந்தாள். உதடுகள் திறந்ததும் அவளுடைய முத்துப் போன்ற பற்கள் கண்ணாடியில் தெரிந்தன. அவை அவளை நோக்கி, "குழந்தாய்! எங்களுக்கும் உனக்கும் எந்நாளும் இன்பமே. நாங்கள் உனக்குச் செய்யவேண்டிய வேலையைச் செவ்வையாய்ச் செய்து கொடுக்கிறோம். நீயும் உன்னுடைய உதவியை எங்களுக்கு முழு மனதுடன் கொடுக்கிறாய். ஆகையால் நமக்கு ஒருநாளும் துன்பமே இல்லை" என்றன.

இம் மொழிகளைக் கேட்டதும் கமலம் அளவு இல்லாத அதிசயம் அடைந்தாள். பற்கள் பேசுவது வழக்கம் இல்லாத ஒரு புதுமை யல்லவா? எனினும், அவள் ஆச்சரியத்தை ஒருவாறு அடக்கிக்கொண்டு, பற்களைப் பார்த்து, "நீங்கள் எனக்கு என்ன வேலை செய்து வருகிறீர்கள்? அது எனக்குச் சிறிதும் தெரியாதே! தயை செய்து சொல்லுங்கள்" என்றாள்.

கமலத்தின் கேள்விக்குப் பற்கள் பின் வருமாறு பதில் கூறின:—

"குழந்தாய்! உன் அன்னை உனக்கு உணவு கொடுக்கிறாள். நீ அதை உண்டு வளர்ந்து வருகிறாய். ஆனால், அந்த உணவை உன் உடலுக்கு வளர்ச்சியையும் வலிமையையும் கொடுக்கும்படி செய்வது யார் என்று உனக்குத் தெரியாது. அவர்கள் நாங்களே."

"அது எப்படி?" என்று கமலம் கேட்கப் பற்கள் திரும்பவும் சொல்லின :—

"நீ உணவைக் கையால் எடுத்து வாயில் போடுகிறாய். அது அப்படியே வயிற்றுக்குள் போகாது. போனாலும் பயன்படாது. ஆகையால் நாங்கள் அதைச் சிறிது நேரம் வாயில் நிறுத்தி, அது எவ்வளவு கடினமாயிருந்தாலும், அதைக் கடித்து உடைத்துப் பொடியாக்குகிறோம். பிறகு

வாயில் இருந்து ஊறும் உமிழ் நீரைக் கலந்து அதை நன்ருய் அரைத்துக் குழைக்கிரும். அதன் பின்புதான், அது தொண்டையின் வழியே வயிற்றினுள் போகும். வயிற்றுக்குள் இருக்கும் ஒரு பையில் சென்று, அங்கு ஊறும் வேறு சில நீர்களுடன் கலந்து, செரிக்கும். அதன் சத்து இரத்தமாக மாறி, உடலுக்கு வளர்ச்சியையும் வலிமையையும் கொடுக்கும். சக்கை மலமாக வெளியே வந்துவிடும்.''

இவைகளை எல்லாம் கேட்ட கமலம் ஆச்சரியமும் ஆனந்தமும் அடைந்தாள்.

---

6. பற்கள் II

பின்பு, கமலம் பற்களைப் பார்த்து, ''நல்லது. இப்போது நீங்கள் எனக்குச் செய்துவரும் உதவிகளை அறிந்துகொண்டேன். இனி நான் உங்களுக்கு ஏதோ உதவி செய்கிறேன் என்று முன்னமே சொன்னீர்களே. அஃது என்ன என்று எனக்குத் தெரிவியுங்கள். இனி அதை உங்களுக்கு நன்ருய்ச் செய்து கொடுக்க வேண்டும் என்று எனக்கு மிகுந்த ஆவல் ஏற்படுகிறது,'' என்ருள்.

இதைக் கேட்டதும் பற்கள் பின் வருமாறு கூறின :—

“ குழந்தாய், கேள் ! நாங்கள் கடித்து மெல்லுகிற உணவுப் பொருள்களின் துண்டுகளில் சில எங்கள்மீது இருக்கும் குழிகளிலும் எங்கள் இடைகளிலும் ஒட்டிக்கொள்ளும். அவைகளை வெளியே தள்ள எங்களால் இயலாது. அவை அங்கு இருந்து அழுகிக் கெட்ட நாற்றத்தைக் கொடுக்கும்.”

குறையும் சொல்லி முடிக்குமுன் கமலம், “ இதுதானா பெரிய காரியம்! எப்போதும் உணவு உண்டு முடிந்ததும் நான் வாயில் தண்ணீரை ஊற்றித் திரும்பத் திரும்பக் கொப்பளித்து, உங்களை நன்றாய் அலம்பி, உங்கள் மீது ஒட்டிக் கொண்டு இருக்கும் துண்டுகளை யெல்லாம் போக்கி விடுவேன் ” என்றாள்.

அதற்குப் பற்கள், “ ஆம், நீ அவ்வாறு செய்வாய். அது எங்களுக்குத் தெரியும். ஆனால் குழந்தைகளில் சிலர், இடை இடையே சிற்றுண்டிகள் உண்ணும்போதும் அப்படி வாயைக் கழுவுவது இல்லை. இன்னும் சில பிள்ளைகள் அடிக்கடி பண்டங்களைத் தின்று கொண்டே இருப்பார்கள். அவர்களும் அவ் வேளைகளிலெல்லாம் வாயில் நீரை விட்டு அலம்புவது இல்லை ” என்றன.

கமலம், “ ஆனால் நான் ஒருபோதும் அப்படி இருக்கமாட்டேன். நீங்கள் அஞ்ச

வேண்டாம். இதைத் தவிரவும் நான் உங்களுக்கு வேறு ஏதாவது செய்யவேண்டுமா ?" என்றாள்.

அதற்குப் பற்கள், "மற்றும் நீ நாள்தோறும் காலையில் எழுந்தவுடன் எங்கள் மீது படிந்து இருக்கும் ஊத்தையை நீக்கி, எங்களைச் சுத்தி செய்து வருகிறாய். ஆனால் அங்ஙனம் செய்யாவிட்டால் வாய் நாறும். ஒரு விதமான சிறு புழுக்கள் உண்டாகி, எங்களைக் குடைந்து எங்களுக்கு வலியைக் கொடுக்கும்" என்றன.

"அப்படியா? அதற்கும் அஞ்சவேண்டாம். அப்புழுக்கள் உண்டாகாதபடி, நான் எந்நாளும் உங்களைச் சுத்தம் செய்து பாதுகாத்துக் கொள்வேன்" என்று கமலம் உறுதி கூறினாள்.

பின்பு பற்கள், "ஆனால் இன்னும் ஒன்று மாத்திரம் சொல்லுகிறோம். அதையும் கேட்டுக் கொள். இப்போது போலவே நீ மெதுவான பொருள்களைக் கொண்டு எங்களை எப்போதும் தேய்த்துச் சுத்தம் செய். செங்கல், மண், மணல் முதலிய கடினமான பொருள்களை எங்கள்மீது தேய்க்காதே. அவை ஊத்தையோடு எங்களையும் தேய்த்துக் குறைத்துவிடும். நாங்கள் வலிமையையும் வேலைசெய்யும் திறமையையும் இழந்து, சில ஆண்டுகளில் விழுந்து விடுவோம்" என்றன.

இம்மொழிகளைக் கேட்ட கமலம், "ஐயோ! நான் ஒரு நாளும் அப்படிச் செய்யமாட்டேன். உங்களுக்கு ஒருபோதும் தீங்கு வரமாட்டாது. கவலை அடையாதீர்கள்!" என்று உறுதி சொன்னாள்.

இத்துடன் பற்கள் தங்கள் பேச்சை முடித்தன. கமலமும் தன்னுடைய வேறு வேலைகளைப் பார்க்கப் போனாள்.

---

7. குயவன்

பிள்ளைகளே! நீங்கள் உண்ணும் உணவுப் பொருள்கள் சட்டி பானைகளில் சமைக்கப் படுகின்றன. பல வீடுகளில் இப்பாத்திரங்கள் பித்தளை, செம்பு, வெண்கலம் முதலியவற்றால் செய்யப்பட்டு இருக்கும். ஆனால் பணக்காரர் முதல் ஏழைகள் வரை யாவரும் எளிதில் வாங்கி உபயோகிக்கக் கூடியவை மண்பாண்டங்களேயாம்.

2. இம் மண் பாண்டங்களைச் செய்து கொடுப்பவன் குயவன். அவன் அவைகளைச் செய்யும்போது நீங்கள் பக்கத்தில் நின்று பார்த்து இருக்கிறீர்களா?

3. முதலில் குயவன் வயல்களிலும் ஆற்றின் படுகைகளிலும் இருந்து நல்ல களிமண் வெட்டிக் கொண்டுவந்து வைத்திருப்பான். அம்

மண்ணைக் கொத்தித் தண்ணீர் விட்டு ஊற வைத்-துக் கால்களால் நன்றாய் மிதித்துக் குழைப்பான். அப்போதே கால்களில் தென்படும் சிறு கற்கள், குப்பை, கூளம் முதலியவற்றை எடுத்து அப்புறப் படுத்துவான். பிறகு அதில் அளவுக்குத் தகுந்த-படி பொடிமணல் கலந்து திரும்பவும் தண்ணீர் ஊற்றி மிதித்துக் குழைப்பான். குழைத்த மண்ணைக் கைகளால் பக்குவமாய்ப் பிசைந்து உருண்டையாக உருட்டுவான்.

4. இந்த மண் உருண்டையே குயவன் கை-யால் மண் பாண்டம் ஆகின்றது. அவனுக்கு

இதற்கு உதவி புரியும் ஆயுதங்கள் ஒரு சக்கரமும் ஒரு கோலுமேயாம். சக்கரத்தின் மத்தியிலுள்ள பலகையின் அடிப்பக்கத்தில் பம்பரம் போன்ற ஒரு சிறிய இரும்பு முளை இருக்கும். இச் சக்கரத்தைக் குயவன் சற்று உயரமாகப் போட்டிருக்கும் பிசைந்து இறுகிய ஒரு மண் கட்டியின்மேல் வைக்கிறான். அக் கட்டியின் உச்சியில் உள்ள ஒரு சிறு கல்லின் குழியில் சக்கரத்தின் முளை நிற்கிறது. பிறகு சக்கரத்தின் நடுவிலுள்ள பலகையின் மேல் பக்குவமாய்ப் பிசைந்த அம் மண் உருண்டையை வைத்துச் சக்கரத்தைக் கோல் கொண்டு விரைவாய்ச் சுற்றுகிறான்.

5. சக்கரம் சுற்றும்போது குயவன் மண் உருண்டையின் நடுவே தன் கைவிரல்களை விட்டு அதை அகலமாக்கித் தான் நினைக்கும் பாத்திரத்தின் உருவத்தை அதற்குக் கொடுக்கிறான். அருகில் ஒரு சட்டியில் இருக்கும் தண்ணீரில் தன் விரல்களை அடிக்கடி நனைத்துக் கொண்டு, இன்னும் இரண்டு மூன்று சுற்றுகளில் அவன் அதற்கு விளிம்பு மடித்து விடுகிறான். இன்னும் நாலு ஐந்து சுற்றுகளில் அதற்குக் கழுத்தும் உடம்பும் வந்து விடுகின்றன! இப்படிச் சக்கரம் சுழன்று வருவதும், அவன் கை விரல்களின் திறமையினால் உருவ மில்லாத ஒரு மண் உருண்டை அழகிய உருவம் பெற்று ஒரு பாத்திரமாக அமை-

வதும் பார்வைக்கு எவ்வளவோ ஆச்சரியமாக இருக்கும்.

6. சக்கரம் சுற்றி வரும்போதே குயவன் ஒரு சிறு மூங்கில் பிளவினுல் அப் பாத்திரத்தின் கீழே அறுத்து அதை எடுத்து அருகில் வைப்பான். அப்போது அதற்கு அடிப்பாகம் இராது. சக்கரத்தில் தன் வேலை முடிந்த பிறகு, குயவன் செய்து வைத்த பாண்டங்கள் எல்லாவற்றையும் சில மணி நேரம் நிழலில் காய வைத்துப் பிறகு அவற்றிற்குத் தூர் போடுவான். அதாவது ஒரு வழுவழுப்பான கொட்டுக் கல்லைப் பாத்திரத்தினுள்ளே பிடித்துக் கொண்டு, பாத்திரத்தை அதில் கவிழ வைத்து, ஒரு சிறு தட்டுப் பலகையால் அதன் பக்கங்களை அடித்து அடித்து நெருக்கிச் சேர்ப்பான். இவ்வாறு முற்றிலும் செய்து முடித்தபின் பாண்டங்களைக் குயவன் வெயிலில் உலர்த்தி எடுத்து அடுக்கு அடுக்காய்க் குவித்து வைப்பான்.

7. ஆனுல் அப்போதே இம் மண்கலங்கள் உபயோகத்திற்குத் தகுதியுள்ளவை ஆகா. இவைகளில் தண்ணீர் ஊற்றினுல் மண் கரைந்து விடும். ஆதலால் குயவன் இவைகளைச் சூளையில் வைத்துச் சுடுவான். சுட்டபிறகு இவை உறுதி அடையும்.

8. இவ்வாறு குயவன் நமக்குச் சட்டி, பானை, தோண்டி, குடம், கலயம், தாழி, மிடா முதலிய பல மண் பாண்டங்களைச் செய்து கொடுக்கிறான். இவைகளைத் தவிர செடிகள் வைத்து வளர்ப்பதற்கு அழகிய பூந் தொட்டிகளையும் அவன் செய்து கொடுப்பான்.

---

8. எறும்பும் புருவும்

ஒரு நாள் ஓர் ஆற்றில் திடீரென வெள்ளம் வந்தது. கரையில் இருந்த குழி ஒன்றில் தண்ணீர் புகுந்தது. ஒரு நொடியில் குழி நிறையவும் அதிலிருந்த எறும்பு ஒன்று வெள்ளத்தில் அகப்பட்டுக் கொண்டது. நீரோட்டம் எறும்பைச் சுருட்டி இழுத்தது.

2. பாவம்! வெள்ளத்தில் யார்தான் என்ன செய்யக்கூடும்? எறும்பு அங்கும் இங்கும் நீந்திப் பார்த்தது. அது என்ன பாடு பட்டும் கரைக்கு வர முடியவில்லை. அதன் கால்கள் சோர்ந்தன. அது தண்ணீருக்குள் மூழ்கி மூழ்கித் தத்தளித்தது.

3. அத்தருணத்தில் அதன் கண்கள் கரையில் ஒரு ஆலமரத்தில் இருந்த புருவின்மேல் வீழ்ந்தன. உடனே அது புருவை நோக்கி, "அண்ணா, புருவே! உன் அலகால் ஒரு இலை

பறித்து என் அருகில் போடாய்! நான் அதன் மீது ஏறிக்கொண்டு பிழைத்துக்கொள்ளு-கிறேன்,'' என்று கெஞ்சிற்று.

4. எறும்பின் பெருந் துயரைக் கண்டு புரு மனம் இரங்கிற்று. உடனே அது அவ்வாறே ஓர் இலையைப் பறித்து எறும்பின் அருகில் தண்-ணீரில் போட்டது. எறும்பு, "அப்பா! பிழைத்-தேன்!! என்று ஆலிலைமேல் ஏறிற்று. சற்று நேரத்தில், ஆற்றின் வளைவுகள் ஒன்றில் காற்று இலையைக் கரை ஓரமாகச் சேர்க்கவும் எறும்பு ஒரு புதரைப் பற்றிக்கொண்டு பெரு மகிழ்ச்சி-யுடன் கரை ஏறியது.

5. அது முதல் எறும்பும் புருவும் இணை பிரியாத நண்பர்கள் ஆயின. புரு ஆலமரத்தின் மேலும் எறும்பு அதன் அடியிலுமாக இரண்டும் அங்கே இனிது கூடி வாழ்ந்து வந்தன.

6. இவ்வாறு கொஞ்ச காலம் கழிந்தது. அதன் பின்பு ஒருநாள் எங்கும் இரைகாணு-மல் அலைந்த வேடன் ஒருவன் வில்லும் கையு-மாய் அவ்வழியே நடந்து வந்தான். வந்தவன் மரத்தின் மீது இருந்த புருவைப் பார்த்தான். "ஆ, இப்போதுதான் எனக்கு நல்லவேளை வந்தது!" என்று மகிழ்ந்துகொண்டு, உடனே அதைக் கொல்லத் துணிந்து, ஓர் அம்பை எடுத்து வில்லில் தொடுத்து எய்யத் தொடங்கினன்.

7. பாவம்! புறு அக் கொடியவனைப் பார்க்க வில்லை. ஆனால் எறும்பு தற்செயலாய் அப் பக்கம் திரும்பிற்று. வேடனைக் கண்டு அவனது உள்ளக்கருத்தை அறிந்தது. தன் உயிரைக் காப்



பாற்றிய தோழன் உயிர் பதைக்கவும் அது பொறுக்குமா? உடனே அது வேடனுடைய காலைச் சுறுக்கென்று கடித்தது. வேடன் தொடுத்த அம்பு குறிதவறிப் புறுவின் பக்கமாய் ஒதுங்கிப் போய்த் தரையில் விழுந்தது. புறு திடுக்கிட்டு

அப்புறம் பறந்தது. வேடனும் தன் எண்ணம் பலிக்காமல் ஏமாந்துபோய் வேறிடம் சென்றுன்.

8. வேடன் அவ்விடத்தை விட்டு நீங்கவே புரு தன் உயிரைக் காப்பாற்றியவன் தன் தோழனே என்று உணர்ந்தது. இரண்டும் பெரிதும் மகிழ்ந்து முன்னிலும் பன்மடங்கு அதிக அன்புடன் அங்கே நெடுங்காலம் இனிது வாழ்ந்து வந்தன.

"உபகாரம் வீண்போகாது"

பாட்டு

1. ஆற்றினிலே வெள்ளம் பெருகி அலேகள்
புரளுதே
அதிலோர் எறும்பு தத்தளித்து அலேந்து
உருளுதே!
2. அலேயும் எறும்பு கரையில் சேர ஆசை
கொண்டதே
அங்கோர் ஆல மரத்தில் புரு அமரக்
கண்டதே!
3. அண்ணு! என்னேப் பாதுகாக்க அன்பு
காட்டிடாய்
அலகில் மரத்தின் இலேயைப் பறித்து
அருகில் போட்டிடாய்!
4. என்று புலம்பும் எறும்பின் துயரை இனிது
கேட்டது;

இலையில் ஒன்றைப் பறித்துப் புரு எளிதில்
போட்டது.

5. காற்றும் இலையை எறும்பின் பக்கம் கடிதில்
சேர்த்திற்றே!
களிக்கும் எறும்பு தெப்பமேறக் கரையில்
ஏற்றிற்றே!

6. உயிர்கொடுத்த புருவை எறும்பு மறக்க எண்
ணுமோ?
உயர்ந்த நேசம் கொண்ட இருவர் பிரிய
ஒண்ணுமோ?

7. புரு மரத்திலேயும் எறும்பு புற்றில் இருப்
பிடம்
பொருந்தும் அவைகள் பேசி மகிழ்ந்து
புதுமை பெருக்கிடும்.

(வேறு)

8. இப்படி இவை இருக்க—ஒருநாள்
எங்குமிரை காணுமல் அலைந்தவேடன்
9. அந்தவழி வரும் போது—கிளையினில்
அமர்ந்துள்ள புருவதைக்கண்டுமகிழ்ந்தான்!
10. கைதனில்வில்லைஎடுத்தான்—அம்பை அவன்
கடிதினில் விடமிகக் குறிதொடுத்தான்!
11. பார்த்தது எறும்படடா!—நேசனுயிர்
பதைக்காத படிவேடன் பதறிடவே
12. சுறுக்கென்று கடித்ததுவே—வேடன் குறி
தொலையப் புருமகிழ்ந்து பறந்ததுவே!

13. ஆதலால் நாம் செய்த நன்றி—என்றும்
ஆபத்தில் உதவுவதாம் கண்டுகொண்டீர் !

14. நாம் பிறர் துயர்தீர்க்கவேண்டும்—வேண்டில்
நம் உயிர் கொடுத்தேனும் நலம் காத்தல்
வேண்டும்.

---

9. மாலை நேரம்

மாலையில் கதிரவன் மேல் வானத்தை நோக்கி விரைவாகச் செல்லுகிறான். கண்கொண்டு பார்க்க முடியாமல் நெருப்பு மயமாய் இருந்த அவனுடைய முகம் இப்போது சாந்தமாய்ப் பிரகாசிக்கின்றது. அவனுடைய கிரணங்கள் சாய்ந்து போய்த் தங்கள் வலிமையை இழக்கின்றன. அதனால் வெயிலின் கடுமை தணிகின்றது. எங்கும் சூடு ஆறுகிறது. குளிர்ந்த மென்காற்று வீச ஆரம்பிக்கின்றது.

2. இம் மாறுதலைக் காணும் பறவைகள் பெருமகிழ்ச்சி அடைகின்றன. காகங்கள் மரங்களின் மேலும், வீட்டுக் கூரைகளின் மேலும், கூட்டம் கூட்டமாய்க் கூடி "கா", "கா" என்று கரைந்து களிக்கின்றன, கிளிகள் "கீ", "கீ" என்று கூவிக்கொண்டு இங்கும் அங்கும் பறந்து



விளையாடுகின்றன. குருவிகள் சிறிது பறந்து கொண்டும், சிறிது குதித்துக்கொண்டும் "கீச்" "கீச்" என்று கீச்சிடுகின்றன. மற்றைய பறவைகளும் உல்லாசமாய்ப் பறந்துகொண்டும், மரங்களில் உட்கார்ந்து பாடிக்கொண்டும், இன்பம் அநுபவிக்கின்றன.

3. வெயிலில் வாடி வதங்கிக் கிடந்த செடி கொடிகளும் இப்போது மெல்லத் தலையைத் தூக்கி நிமிர்ந்து எழுந்து மகிழ்கின்றன. மல்லிகை, முல்லை, மந்தாரை முதலிய செடிகளின் பூ, அரும்புகள் அழகாய் விரிந்து மலர்கின்றன. பூமணம் எங்கும் வீசுகின்றது.

4. இக் காட்சிகளையும், மெல்லிய பூங் காற்றில் விளையும் சுகத்தையும் அநுபவிக்கப் பெண்களும் பிள்ளைகளும் வீட்டின் வெளிப்புறங்களில் வந்து திண்ணைகளில் உட்காருகின்றனர். வாசல்களிலும், தோட்டங்களிலும் நிற்கின்றனர். இதற்காக வீட்டுத் திண்ணைகளையும் முற்றங்களையும் தண்ணீர் தெளித்துக் கோலம் இட்டு அழகுபடச் செய்கின்றனர். பெரியோரும் சிறியோரும் வெளியே உலாவிவரச் செல்கின்றனர். புல்வெளிகளிலும், காலி இடங்களிலும், ஆற்றங் கரைகளிலும், உட்கார்ந்து அவர்கள் தங்கள் அலுப்பை நீக்கித் துன்பத்தை மறந்து இன்பத்தை அடைகின்றனர். பிள்ளைகள் இவ்விடங்களில் குதித்தும், ஓடியும், ஆடியும் களிக்கின்றனர். சிறுவர்கள் விளையாட்டுகளுக்கும் தேக அப்பியாசங்களுக்கும் ஏற்ற நேரமும் இதுவேயாகும்.

5. இதற்குள் சூரியனும் மேற்கே மலையை அணுகிப் பின்பக்கம் குதித்து மறைகிறான். அவன் மறைந்தும் அவன் முக ஒளி இன்னும் தங்கி நிற்கின்றது. மேல்வானம் செந்நிறத்துடன் அழகாய் விளங்குகின்றது. செந்நிறத்திலும், பொன்னிறத்திலும், வெண்ணிறத்திலும் மேகங்கள் நிமிடமும் ஒவ்வோர் உருவத்தை அடைந்து மாறுகின்றன. இப்போது அவை செம்பரத்தைப் பூக்கள் சிந்திக் கிடப்பது போலத் தோன்றுகின்-

றன! சிறிது நேரத்தில் அவை இரத்தினக் கம்பளம் விரித்ததுபோலத் தோன்றுகின்றன! விரிந்த கடலில் அலைகள் துள்ளி ஓடுவதுபோல, நீல வானத்தின் மற்ற இடங்களில் வெண்ணிற மேகங்கள் ஊடே செல்கின்றன.

6. இதற்குள் கொஞ்சம் கொஞ்சமாகப் பொழுது கருகுகின்றது. பிள்ளைகள் விளையாட்டுகளை முடித்துக்கொண்டு விளக்குமுன் இருந்து தங்கள் பாடங்களைப் படிக்க வீடுகளுக்குத் திரும்புகின்றனர். பறவைகள் தங்கள் கூடுகளில் வந்து அடைகின்றன. இருள் எங்கும் நெருங்குகின்றது. வானத்தில் சிறிய நட்சத்திரங்கள் தோன்றி மின்மினிப் பூச்சிகள்போலச் சிறிய ஒளிவிடுகின்றன. இப்போது இரவு வந்துவிட்டது.

---

10. கதிரவனும் சிறுவனும்

1. கதிரவனே! கதிரவனே!
காலையில் எழுந்தாயே!
களித்து யாங்கள் ஆடும்போது
கடிதினில் மறைந்தாயே!

2. மின்னும் சிறிய விண் மீன்களை
வெருட்டி ஓட்டினாயே!
இன்னும் வட்டச் சந்திரனை
எங்கோ மறைத்தாயே!



3. உறங்கப் போன நீ இப்போது
ஓடி எப்படி வந்தாய்?
உரைப்பாய் இரவில் தங்கி இருந்த
உன திருப்பிடம் நன்ருய்.

4. உறங்கவில்லை, தங்கவில்லை,
உலகைச் சுற்றி நானே
ஓடி வந்தேன் கிழக்கே சிறுவர்
உள மகிழ்ந் திடத்தானே.

5. பறவை மிருகம் மலர்கள் வழியில்
பட்ட யாவும் இன்னும்
படுத்துத் தூங்கும் சிறுவரையும்
பார்த்து எழுப்ப வந்தேன்!

6. உயரும் ஒருவன் சோம்பிக் கிடக்க
ஒண்ணுமே நீ சொல்லாய் !
உலகில் யானும் உறக்க மென்ப
துணரேன் அரிய பிள்ளாய்!



11. காகம்

பிள்ளாய்! என்னைப் பார்த்து ஏன நகைக்கிருய்? நான் மிகவும் கறுப்பாயிருக்கிறேன்; அழகாயில்லை என்று ஏளனம் செய்கிருயா? என் நிறம் அவ்வளவு கருமையா? இல்லை; இல்லை! என் இனத்தில் இரண்டு வகைகள் உண்டு. அவைகளில் ஒன்று அண்டங்காக்கை எனப்படும். அது தான் உடல் முழுவதும் கறுப்பாய் இருக்கும். என் உடல் அப்படி இல்லை. இதோ பார்! என் தலையும், அலகும், கால்களும், சிறகுகளும் தாம் கறுப்பு; என் கழுத்தும், உடலும், சிவபெருமான் திரு

மேனி போலச் சாம்பல் நிறமாயிருக்கின்றன. தவிரவும் அழகாய் இருக்கும் பறவைகள் என்ன பலனை அடைகின்றன? கிளி இனங்கள் அழகா யிருக்கின்றன; மனிதர் அவைகளைப் பிடித்துக் கூண்டில் அடைத்துத் தங்கள் வீடுகளில் வைத்-துக்கொள்ளுகிருர்கள். கோழி இனங்கள் அழகா யிருக்கின்றன; அவைகளைப் பிடித்து மனிதர் அறுத்துத் தின்றுவிடுகின்றனர். நான் அழகாய் இல்லாவிட்டால் என்ன குறைவு? அது எனக்கு நன்மைதானே? என்னை யாராவது தொடுவார்-களா?

2. என்ன, இப்போது என் அலகையும் விரல்களையும் மாறி மாறி நோக்குகிருய்? அவை கள் எப்படி இருக்கின்றன என்று உற்றுப் பார்க்-கிருயா! என் அலகு வலுவாயும் கூர்மையாயும் இருக்கிறது. அதனுல் நான் எதையும் கொத்தித் தின்றுவிடுவேன். என் கால்கள் பலமானவை. அவைகளில் முன் பக்கத்தில் மூன்று விரல்களும் பின் பக்கத்தில் ஒரு விரலும் இருக்கின்றன. இவ் விரல்களின் நகங்களும் கூர்மையானவை. ஆத-லால் நான் எதையும் விரல்களால் பற்றித் தூக்கிக் கொண்டு வெகு தூரம் பறந்து செல்ல முடியும்.

3. என் உணவு என்ன என்று உனக்குத் தெரியுமா? சாப்பாட்டில் நான் உங்களைப் போல் "இது நன்ருயிருக்கிறது, அது நன்ருயில்லை.

இது எனக்கு வேண்டும், அது வேண்டாம்,'' என்று ஒரு போதும் கூறுவதில்லை. கடவுள் கருணையால் கிடைக்கும் எதையும் நான் தின்றுவிடுவேன். நீரில் வாழும் மீன், தவளை, நண்டு முதலிய பிராணிகள், நிலத்தில் வசிக்கும் எலி, அணில், எறும்பு முதலிய சிறிய ஜந்துக்கள், பூச்சி புழுக்கள், பறவைக் குஞ்சுகள், முட்டைகள், மரம், செடி, கொடிகளிலுள்ள காய் கனிகள், வீடுகளிலுள்ள தானியம், அரிசி மற்றைய உணவுப் பொருள்கள் ஆகிய இவைகளில் எவை அகப்பட்டாலும் தின்று பசியாற்றிக் கொள்வேன். மிளகாயையும் வேப்பம் பழத்தையுங்கூட நான் விரும்பிப் புசிப்பேன்.

4. இறந்து கிடக்கும் பிராணிகளின் அழுகிய மாமிசத்தையும் நான் என் இனத்தாருடன் கூட்டம் கூட்டமாய்க் கூடித் தின்றுவிடுவேன். ஏன் முகத்தைச் சுளிக்கிறாய்? நாங்கள் அவ்வாறு செய்வதால் அன்றோ உங்கள் தெருக்களும் இடங்களும் சுத்தமாயிருக்கின்றன. எங்கும் துர்நாற்றம் வீசாமலும், காற்று கெட்டுப்போகாமலும், நோய்கள் வந்து உங்களை வருத்தாமலும் இருக்கின்றன. இப்படிக் கூலிவாங்காமல் தோட்டி வேலை செய்து வருவதாலன்றோ நீங்கள் பகலில் உணவுகொள்ளு முன் எங்களைக் "கா, கா" என்று கூவி அழைத்துச் சோறு போடுகிறீர்கள். ஆனால் நாங்கள்

செய்யும் உதவிக்கு இது போதுமா! ஒருகாலும் போதாது. அதனால்தான் நாங்கள் சிலவேளைகளில் உன்னைப்போன்ற பிள்ளைகள் கையிலிருந்து தின்பண்டங்களைப் பிடுங்கிக்கொள்ளுகிறோம். வீட்டில் உலரப்போட்டிருக்கும் உணவுப் பொருள்களையும் குத்துக் குத்தாய்க் கௌவிக்கொண்டு பறந்து விடுகிறோம். இந்த நியாயத்தை அறியாமல் சில மூடர்கள் எங்களை ஏசிக் கோலால் துரத்துகின்றனர். தோட்டங்களில் புல்லுருச் செய்துவைத்து எங்களை வெருட்டுகின்றனர்.

5. பிள்ளாய், உனக்கு நேரமாகிறதோ? சற்றே பொறு. இன்னும் இரண்டு மூன்று வார்த்தைகளுடன் என் பேச்சை முடித்துவிடுகிறேன். நாங்கள் நல்ல பழக்க வழக்கங்களை உடையவர்கள். நாள்தோறும் குளித்து உடம்பைச் சுத்தமாக வைத்துக்கொள்வோம். அதிகாலையில் எழுந்துவிடுவோம். சேவல்கள் கூவி, நாங்களும் "கா, கா" என்று கரைந்தபின்தான் நீங்கள் கண்களை விழித்து எழுவீர்கள். நாங்கள் ஒருபோதும் சுயநலம் கருதமாட்டோம். ஏதாவது பண்டங்கள் கிடைத்தால் எங்கள் இனத்தார் எல்லோரையும் கூவி அழைத்துக் கிடைத்தவற்றை அவர்களுடன் பகிர்ந்தே புசிப்போம்.

12. திருக்கார்த்திகை

திருக் கார்த்திகை தமிழ் நாட்டிலுள்ள முக்கியமான பண்டிகைகளில் ஒன்று. இது பண்டைக் காலம் முதல் கொண்டாடப்பட்டு வரும் ஒரு திருநாள். ஒவ்வோர் ஆண்டிலும் கார்த்திகை மாதம் கார்த்திகை நட்சத்திரத்தோடு கூடிய நாளில் இது வரும்.

2. அன்று மாலை பெண்கள் வீடுகளை மெழுகிக் கோலம் இட்டு அலங்காரம் செய்வார்கள். திருவிளக் கேற்றியதும், வீடு எங்கும், உள்ளும் புறமும், பல சிறு விளக்குகளை ஏற்றிவைப்பார்கள். இதற்குக் கார்த்திகை விளக்கீடு என்று பெயர். இதற்காகக் குயவன் சிறு சிறு தகழிகளைச் செய்து விற்பான். பெண்கள் அவைகளில் எண்ணெய் ஊற்றித் திரி போட்டுத் திருவிளக்கின் முன் வைத்து ஏற்றி, தேங்காய், பழம், வெற்றிலை, பாக்கு, வெல்லம் இட்ட பொரி முதலியவைகளை வைத்துக் கடவுளை வணங்குவார்கள். இப் பொரி இப் பண்டிகைக்கு மிகவும் உகந்தது. இதைச் சிறுவர்கள் கார்த்திகைப் பொரி என்று கூவிக் குத்துக் குத்தாய் அள்ளி வாயில் போட்டுக் கொண்டு குதித்து மகிழ்வார்கள்.

3. தெய்வத்தைத் தொழுது முடிந்ததும் அச் சிறு விளக்குகள் எல்லாவற்றையும் எடுத்து வீடு முழுவதும் வைத்து அலங்கரிப்பார்கள்.

தெருத்திண்ணைகளிலும், வாசல் முன்னிலையிலும், மாடச் சுவர்களிலும், மேடைகளின்மீதும் இவை களைத் தட்டுத் தட்டாயும் வரிசை வரிசையாயும் அடுக்கி வைப்பார்கள். இவை பார்வைக்கு வெகு அழகா யிருக்கும். தெரு வீதிகளில் நின்று நோக்கினால், இரண்டு பக்கங்களிலும் ஒவ்வொரு வீட்டிலும் இவ் விளக்கு வரிசைகளின் ஒளியும் அழகும் நம் கண்களைக் கவர்ந்து மனதிற்கு மிகுந்த இன்பத்தைக் கொடுக்கும்.

4. இவ்வாறு விளக்கிட்டு முடிந்த பின்னர், சிறுவர்கள் வீட்டுத் திண்ணைகளில் உட்கார்ந்து கொண்டும், தெருக்களில் ஆடிக்கொண்டும், உலர்ந்த சணல் குச்சுகளைக் கொளுத்தியும், பல விதமான வெடிகளையும் வாணங்களையும் ஆகாயத்-தில் விட்டும் களிப்பார்கள். பிறகு சிறிது நேரத்தில் ஆலயங்களில் தெய்வ ஆராதனை ஆரம்-பிக்கும் மணி ஓசை கேட்டு அங்கு ஓடுவார்கள்.

5. கோயில்களிலும் சுவாமிக்கு முன்பும் பக்கங்களிலும் தொங்கும் சரவிளக்குகள் எல்லாம் இன்று ஏற்றப்பட்டிருக்கும். எங்கும் ஒரே செம்-பொற் சோதியாய் விளங்கும். அதன் அழகு நமக்கு அளவில்லாத ஆனந்தத்தைக் கொடுக்கும்.

6. இறைவர் வழிபாடு முடிந்ததும் சிறுவர் களுக்கு மிகுந்த வேடிக்கையான செய்தி ஒன்று நடக்கும். அதற்குச் சொக்கப்பனை கொளுத்துதல்

என்று பெயர். அதாவது கோயில் வாசலுக்கு முன்னால் ஒரு பனைமரத்தைக் கொண்டுவந்து நாட்டி, அதில் கம்புகளைப் பரப்பிக் கட்டி ஓலை வேய்ந்து வைத்திருப்பார்கள். அதன் அருகில் சுவாமி வருவார். வந்ததும் பட்டர் ஒரு தீப் பந்தத்தை நீட்டி அதைக் கொளுத்துவார். உடனே சூழ்ந்து நெருங்கி நிற்கும் மனிதர்களும் பிள்ளைகளும் தாமும் தீப்பந்தங்களை நீட்டி, அதைக் கொளுத்துவார்கள். தீப்பற்றியதும்

சொக்கப்பனை வான் அளவிற்கு ஓங்கிக் கனல் விட்டு எரியும். சிறுவர்கள் எரியும் தீயில் வெடி-களை வீசியும், சணல் குச்சுகளை எறிந்தும் களித்துக்

கூத்தாடுவார்கள். இக்காலம் குளிர்காலம் ஆதலால் தீயின் வெக்கையும் விரும்பத் தக்கதாகவே இருக்கும்.

7. சொக்கப்பனை எரிந்து முடிந்தபின் எல்லோரும் தங்கள் வீடுகளுக்குத் திரும்புவார்கள். சிலர் சிறிது எரிந்து அணைந்து கிடக்கும் கம்புகளைத் தங்களுடன் எடுத்துச் செல்லுவார்கள். அவைகளைக்கொண்டுபோய் அவரைப் பந்தல்களில் போட்டால், அவரை நன்றாய்க் காய்க்கும் என்பது அவர்களுடைய நம்பிக்கை.

———



13. சின்னஞ் சிறிய செடி

(விதை முளைத்தல்)

1. சின்னஞ் சிறிய குழந்தை—நான்
சிறிய தோர் விதையினுள் உறங்கி இருந்தேன்

2. பூமியில் ஆழத்தில் உள்ளே—வெகு
பொறுமையாய் உறங்கிய என்னையும் தட்டிக்
3. கதிரவன் "எழுந்திரு !" என்றான்—"வெளிக்
காட்சி அழகினைக் காண் எழு" என்றான்.
4. மழைத்துளி நண்பனும் என்னை—மிக
மகிழ்வுடன் "எழுந்திரு!" என அழைத்தான்.
5. கண்கள் விழித்தெழுந் தேனே—நான் மேல்
கண்ட விநோதங்கள் என்ன சொல்வேனே !

---

14. நாய்

நாய் நமது வீடுகளில் வளர்க்கப்படும் பிராணிகளில் ஒன்று. அது நமக்குப் பல விதங்களில் உபயோகமானது. நம் வீட்டையும் பொருள்களையும் கவனமாகக் காப்பதில் அது ஓர் உண்மையான காவற்காரனாகும். நாம் காட்டும் குறிப்புக்களை உணர்ந்து அவைகளின்படி நடப்பதில் அது ஒரு திறமையுள்ள வேலைக்காரனாகும். தன்னை வளர்ப்பவர்கள் இடத்தில் அது மிகுந்த நன்றி அறிவு உள்ளது. அவர்களுக்காகத் தன் உயிரையும் கொடுக்க முன் வரும்.

2. நாய்களில் பல இனங்கள் உண்டு. ஒவ்வொன்றும் ஒவ்வொரு விதத்தில் மனிதருக்கு உபயோக மாகின்றது.



3. இந்தப் படத்தில் காணப்படுவது பட்டி நாய். இது ஆட்டுமந்தைகளைக் காப்பதில் இடையருக்கு மிகவும் உபயோகமானது. தன் மந்தையிலுள்ள ஆடுகள் வேறிடங்களுக்குச் சென்று தவறிப் போகாமலும் வேறு ஆடுகள் தன் மந்தைக்கு வராமலும் இது பார்த்துக்கொள்ளும். திருடராவது அயலாராவது அருகில் வந்தால் அவர்களைக் குரைத்து வெருட்டும். இரவில் விழித்து இருந்து நரி, ஓநாய் முதலிய காட்டு மிருகங்கள் வந்து ஆட்டுக் குட்டிகளைப் பிடித்துக்கொண்டு போகாதபடி பார்த்துக்கொள்ளும். அவை ஏவையாவது வந்தால் உரக்கக் குரைத்து, தன் எஜமானனை எழுப்பும். சில வேளைகளில் தானே அவைகளுடன் சண்டைசெய்து அவைகளைக் கடித்துத் துரத்தும்.



4. இது வேட்டை நாய். இது காட்டுமிருகங்களை வேட்டையாடுவோருக்கு மிகவும் உபயோகமானது. இதன் உடலை நன்ருய் உற்றுப்பாருங்கள். இதன் மார்பு அகன்று, வயிறு ஒடுங்கி, கால்கள் நீண்டு இருக்கின்றன. ஆதலால் இது வெகுவேகமாக ஓடி மிருகங்களை எளிதில் பிடிக்கும். இதன் மூக்கு நீண்டு கூர்மையாய் இருப்பதால், இதற்கு மோப்பம் பிடிக்கும் சக்தி அதிகம் உண்டு. வேட்டையாடுவதில் இதுவும் ஒரு பெரிய அநுகூலமாகிறது. இந் நாயின் முன்பற்கள் நீண்டு கூர்மையாய் இருக்கும். பிராணிகளைப் பிடித்தவுடன் கடித்துக் கிழிப்பதற்கு அவை மிகவும் உதவியாகின்றன.



5. இந்த நாயைப் பாருங்கள். இது ஒரு வகைச் சீமை நாய். இதற்கு ஆங்கிலத்தில் "புல்-டாக்" என்று பெயர். இதன் உடம்பும் முகமும் எவ்வளவு விகாரமாய் இருக்கின்றன! பார்-வைக்கே இது மிகவும் பயங்கரமாக இருக்கும். அத்துடன் இது அதிக தேக பலமும் உள்ளது. இது இருக்கும் வீட்டைத் திருடன் அணுகவும் அஞ்சுவான். கள்ளனைக் கண்டால் ஒரே பாய்ச்சலாக அவன் மீது விழும். ஒரே கடியில் அவன் சதையை ஆழமாகப் பிடுங்கி அவனைக் கெட்டியாகப் பிடித்துக் கொள்ளும். அவன் தன்னை வெட்டினாலும் பிடியை விடாது. எஜமானன் வந்து கட்டளையிட்ட பிறகே அவனை விடும். வீட்டுக்காவலுக்கு இதற்கு மேலாக எதையாவது சொல்லமுடியுமா?

6. இவைகளைத் தவிர நாய்களில் இன்னும் சில வகைகள் இருக்கின்றன. அவைகளைப்பற்றி நீங்கள் மேல் வகுப்புக்களில் படிப்பீர்கள்.

7. எல்லா இன நாய்களும் சோறும் இறைச்சியும் தின்னும். எலும்பைக் கடிப்பதில் அவைகளுக்கு விருப்பம் அதிகம். நாய்கள் தண்ணீர் குடிப்பதை நீங்கள் பார்த்து இருக்கிறீர்களா? மாடுகள் தண்ணீரை ஒரு நொடியில் உறிஞ்சி விடும். ஆனால் நாய்கள் எவ்வளவு தாகமாக இருந்தாலும் நாக்கினால் நக்கியே குடிக்கும். "ஆற்றில் வெள்ளம் போனாலும் நாய் நக்கித் தான் குடிக்கும்" என்பது பழமொழி.

---

15. நாயின் நன்றி அறிவு I

முந்திய பாடத்தில் நாய் மிகவும் நன்றி அறிவுள்ள பிராணி என்று படித்தீர்கள் அல்லவா? அதைப்பற்றி இங்கு ஒரு கதை சொல்லுகிறேன்; கேளுங்கள்.

2. ஓர் ஊரில் வர்த்தகன் ஒருவன் இருந்தான். வியாபாரத்திற்காக அவன் அயல் ஊர்களுக்கு அடிக்கடி போய்வருவான். ஏறிச் செல்வதற்கு அவனிடம் ஒரு குதிரை இருந்தது. அதனுடன் அறிவு மிகுந்த நாய் ஒன்றையும் அவன் பிரியமாக வளர்த்து வந்தான். அந்

நாயும் அவனிடம் அதிக அன்பு காட்டி வந்தது. அவன் குதிரைமேல் ஏறி வெளி ஊர்களுக்குப் போகும் போதெல்லாம் அதுவும் அவன் பின்னு-லேயே போய்வரும்.

3. ஒரு நாள் வர்த்தகன் ஓர் ஊருக்குச் சென்று சிலருக்குப் பணம் கொடுத்துவரவேண்டி இருந்தது. அதற்காக அவன் பணப் பையை எடுத்துக்கொண்டு குதிரைமேல் ஏறிப் புறப்பட்-டான். நாயும் வழக்கம் போல் அவனைப் பின் தொடர்ந்தது. பாதி வழி போனதும் வெயிலின் கடுமையால் வியாபாரி மிகவும் களைப்படைந்தான். இன்னும் சிறிது தூரம் சென்றதும் ஓர் ஓடை-யும் தோப்பும் குறுக்கிட்டன. அவன் அங்கே தன் குதிரையை நிறுத்திக் கீழே இறங்கினான்.

4. குதிரையைத் தோப்பில் மேயவிட்டு விட்டு, வர்த்தகன் ஓடையில் இறங்கித் தன் கை, கால், முகம் கழுவினான். இரண்டு கைகளிலும் கொஞ்சம் தண்ணீரை அள்ளிக் குடித்தான். கரையில் உட்கார்ந்து தான் கொண்டு வந்திருந்த உணவையும் அருந்தினான். பிறகு தோப்பிற்குள் செல்லவும் குளிர்ந்த நிழலில் மெல்லிய பூங்காற்று அவன்மீது வீசிற்று. "சிறிது நேரம் இங்கே படுத்திருந்து இளைப்பாறுவோம்" என்று அவன் எண்ணினான். குதிரையின் சேணத்தைத் தலை-யணையாக வைத்துக் கொண்டு புல்லின் மேல்



தன் மேலாடையை விரித்தான். பணப் பையைத் தலைக்கு அருகில் வைத்து, நாயைக் கூப்பிட்டு அதற்குக் காவல் இருக்கச் செய்துவிட்டு, அவன் கீழே படுத்துக் கண்களை மூடினான்.

5. வியாபாரி முந்திய இரண்டு இரவுகளில் நன்றாய் உறங்கவில்லை. அதனால் அவன் அக் குளிர்ந்த காற்றில் அயர்ந்து தூங்கிவிட்டான். காவல் இருந்த நாய் நேரம் செல்வதைக் கவனித்தது. தன் எஜமானன் அவ்வூருக்குச் சென்று அன்றே திரும்பவும் வீடு வந்து சேர வேண்டும். அதற்குப் பொழுது இருக்கும்போதே புறப்படவேண்டும் அல்லவா? ஆதலால் அது தன் எஜமானனை எழுப்பத் தீர்மானித்து அவன் கையை மெதுவாக நக்கிற்று.

6. வியாபாரி திடுக்கிட்டுக் கண்களை விழித்தான். அவனுக்குத் தூக்கம் நன்ருய்த் தெளிய வில்லை. எனினும் உடனே அண்ணாந்து வானத்தைப் பார்த்தான்! "ஆ! எவ்வளவு நேரம் தூங்கி விட்டேன்! போய்த் திரும்பி வரப் பொழுது இருக்க வேண்டுமே!" என்று சொல்லிக்கொண்டு அவசரமாய் எழுந்து தன் ஆடைகளைப் பொறுக்கினுன். சேணத்தையும் எடுத்துக் குதிரையின் மேல் போட்டான். உடனே தானும் குதிரையின் மேல் ஏறி நாயைக் கூப்பிட்டுக்கொண்டு குதிரையை வேகமாய் நடத்தினுன்.

---

16. நாயின் நன்றி அறிவு II

தூக்கம் நன்ருய்த் தெளியாததனுலும் அவசரத்தினுலும் தன் எஜமானன் பணப்பையை மறந்துவிட்டான் என்பதை நாய் உணர்ந்தது. இதை அவனுக்குத் தெரிவிப்பது எப்படி? அங்கிருந்தே உரக்கக் குரைத்தது. வர்த்தகன் திரும்பிப் பார்க்கவே இல்லை. ஓடிப்போய் அவன் முன் நின்று குரைத்துத் தாங்கள் தங்கி இருந்த இடத்தை நோக்கித் திரும்பிச் சிறிது ஓடி ஓடிக் காட்டிற்று. வியாபாரியின் மனமோ தான் போக வேண்டிய ஊருக்குச் சென்றுவிட்டது. ஆகை

யால் நாயின் செய்கைகள் ஒன்றையும் அவன் பொருள்படுத்தவே இல்லை.

2. "எஜமானன் தங்கிய இடத்திலிருந்து வெகு தூரம் வந்து விட்டான். இனி வேறு யாராவது பணப்பையை எடுத்துக் கொண்டு போய் விடுமுன் அவனை நிறுத்தி அதை அவனுக்கு ஞாபகப்படுத்தவேண்டும். இதை எங்ஙனம் செய்து முடிப்பது ?" என்று நாய் எண்ணி எண்ணிப் பார்த்தது. கடைசியாக வேறு வழி ஒன்றும் தோன்றாமல் குதிரையின் காலைக் கடித்து அதை நிறுத்துவதே தகுதி என்று துணிந்தது.

3. அவ்வாறு குதிரையின் காலைக் கடிக்கவும் வியாபாரி நாயின் குறிப்பை உணராமல் அதற்கு வெறி பிடித்து விட்டது என்று தீர்மானித்தான். வெறி பிடித்த நாயை உடனே கொன்று விடவேண்டும் ; இல்லாவிட்டால் அது எதிரில் காண்பவர்கள் எல்லோரையும் கடித்து மிகுந்த தீங்கு இழைக்கும். ஆதலால் வர்த்தகன் அச்சமுற்றுத் தன் கைத்துப்பாக்கியை எடுத்து நாயைச் சுட்டான். நாயும் சுழன்று கீழே விழுந்தது.

4. கீழே விழுந்த தன் நாயைத் திரும்ப ஒரு முறை கூடப் பார்க்காமல், வர்த்தகன் அவ்வளவு விரைவாகக் குதிரையை நடத்தினான். ஆனால் சிறிது தூரம் சென்றதும், அவன் "ஐயோ ! எவ்வளவு அன்பாக வளர்த்து வந்த நாய் !

இதைக் கொல்ல வேண்டி வந்ததே! இனி எவ்வளவு பணம் கொடுத்தாலும் இவ்வளவு அறிவும் விசுவாசமும் உள்ள நாய் கிடைக்கப்போகிறதோ!" என்று வருந்தினன். பணம் என்று நினைத்ததும் பணப்பை அவன் ஞாபகத்திற்கு வந்தது. ஒரு நொடியில் அவன் தன் நாயின் செய்கைகளின் பொருளை உணர்ந்தான். "ஆ என்ன மதிமோசம்! நாயையும் பணத்தையும்—இரண்டையும்—இழந்தேனே! இனி என்ன செய்வது! என்ன அறியாமை! என்ன அவசரம்!" என்று தன்னையே நொந்து கொண்டான்.

5. பிறகு, "ஒரு வேளை பணப்பை ஒருவரும் எடுத்துப் போகாமல் வைத்த இடத்திலேயே இருக்கலாம்; எதற்கும் போய்ப் பார்த்து வருவோம்" என்று எண்ணிக்கொண்டு, வர்த்தகன் குதிரையைத் தான் வந்த இடத்தை நோக்கித் திருப்பினன். நாயைச் சுட்ட இடத்தை அடைந்ததும், அங்கு இரத்தம் மிகுதியும் சிந்திக் கிடப்பதைக் கண்டு அவன் நெஞ்சு தளர்ந்தான். ஆனல் நாய் அங்குக் காணப்படவில்லை. அவ்விடத்தில் இருந்து இரத்தச் சொட்டுகள் தான் முன் தங்கி இருந்த இடத்தை நோக்கிப் போய்க் கொண்டிருந்தன. சிறிது நேரத்தில் அவன் ஓடையையும் தோப்பையும் அணுகினன். தன் அருமை நாய் பணப் பையின் அருகில் காலை



இழுத்துக்கொண்டும் நீட்டிக்கொண்டும் கிடக்கக்-கண்டான். எஜமானனை அவ்விடத்தில் பார்த்த-தும், நாய் வாலை ஆட்டித் தன் மகிழ்ச்சியைத் தெரிவித்தது.

6. நல்ல வேளை ! நாயும் அதிகமாகக் காயப் படவில்லை. அதன் காலில் மாத்திரம் சிறிது காயம்-இருந்தது. உடனே வர்த்தகன் பணப்பையை எடுத்துக்கொண்டு. நாயை ஓடைக்குத் தூக்கிப் போய் அதன் புண்ணை நன்றாய்க் கழுவி அதன் மேல் ஓர் ஈரத்துணியைச் சுற்றினான். பிறகு அதைத் தன் மடியில் வைத்துக்கொண்டு குதிரை யின்மேல் ஏறி ஊர்போய்ச் சேர்ந்தான். தக்க மருந்து போடவே நாயின் காயமும் சிலநாட்-களில் ஆறியது.

7. பார்த்தீர்களா, இந்த நாயின் நன்றி அறிவை! எஜமானன் தன்னைச் சுட்டாலும், அது தன் உயிர் உள்ள அளவும் அவனுக்கே உண்மையோடு ஊழியம் செய்ய முன்வந்தது!



17. குப்பன் சீரானது

1. குப்பன் என்னும் சிறுவன்
குளிக்காமல் திரிவன்.
2. காடும் மேடும் அலைவான்
கண்ட இடமும் புரள்வான்.
3. பூனை ஒன்றைக் கண்டான்
"போவோம்" ஆட என்றான்.

4. பூனை அவனைச் சீறி
"போ போ மேடு ஏறி

5. அங்கே உனக்கு நண்பர்
அகப் படுவார்" என்ன,

6. அந்தச் சொல்லைக் கேட்டான்
அவனும் ஓடிப் பார்த்தான்.

7. குட்டை ஒன்றில் பன்றி
குழம்பும் சேற்றில் நன்ருய்

8. படுத்திருக்கக் கண்டான்
அடுத்துப் பக்கம் சென்ருன்.

9. "தம்பி, வா, வா! நாமே
தங்கி ஆடலாமே!

10. என்னைப் போல நீயே
எழிலாய் இருக்கின் ருயே!

11. துணியும் உடம்பும் முழுதும்
தோய்ந் திருப்பது அழுக்கே."

12. என்று பன்றி கூற
இவனும் வெட்கம் மீற

13. "ஓ! ஓ! நீயோ அண்ணன்!
உடனே பிரிவேன் திண்ணம்,"

14. என்று கூறி ஏகினுன்
அன்றே தூயன் ஆயினுன்.



18. தென்னை

பிள்ளைகளே! நீங்கள் தென்னை மரத்தைப் பார்த்திருக்கலாம். மற்றைய மரங்களுக்கும் இதற்கும் உள்ள வேற்றுமை என்ன? மற்ற மரங்கள் அடிபருத்துக் கிளைகள் விட்டு வளரும். தென்னை கிளைகள் விடாது; நீண்டு ஓங்கி வளர்ந்துகொண்டு போகும். அதன் உச்சியில் ஒரு கொண்டையைப் போல மட்டைகள் அடர்த்தியாகக் காணப்படும்.

காற்றில் நுனிமரம் அம்மட்டைகளுடன் மெல்லென அங்கும் இங்கும் அசைவது பார்வைக்கு அழகாயிருக்கும். அது பிள்ளைகள் மகிழ்ந்து தலையை அசைத்து ஆடுவதுபோலத் தோன்றும்.

2. தென்னை சூடான நாடுகளிலேயே வளரும். அதற்கு மணற்பாங்கான நிலமும் வேண்டும். ஆகையால் தென்னையை நம் நாட்டில் கடற்கரையை அடுத்த இடங்களிலும் ஆற்றங் கரைகளிலும் தோப்புத் தோப்பாய் வைத்துப் பயிர் செய்வது வழக்கம்.



3. தென்னை பயிர் ஆகும் விதத்தைக் கவனித்து இருக்கிறீர்களா? முதலில் நன்றாய் விளைந்து முற்றிக் காய்ந்த தேங்காய் நெற்றைக்கொண்டு வந்து மணல் மிகுந்த இடத்தில் மேலாக நட்டுத் தண்ணீர் வார்ப்பார்கள். நாற்பது நாட்களில் அது முளை விடும். முளை பெரிதாகிக்கொண்டே வந்து சிலமாதங்கள் சென்றபின் அது ஒரு கன்றாகும். அப்போது அதை எடுத்து வேறு இடத்தில் ஆழமாகக் குழிவெட்டி அதில் மணலும்

உரமும் இட்டு நடுவார்கள். புதிய இடத்தில் தென்னம் பிள்ளை மாதம் ஒரு மட்டை விட்டுக்கொண்டு மெல்ல மெல்ல வளர்ந்து வரும்.

4. இப்படி ஏறக்குறைய ஐந்து அல்லது ஆறு ஆண்டுகள் வளர்ந்தபின்பு தென்னம்பிள்ளை மட்டைகளின் இடையே பாளைகள் விடும். பாளைகள் வெடித்து விரிந்ததும் உள்ளே மஞ்சள் நிறமான சிறிய பூக்கள் தோன்றும். இவை பச்சை ஓலைகளின் நடுவில் பொன்மணிகள் கோத்த சரங்களைப்போலப் பார்வைக்கு அழகாய்த் தொங்கும். சில நாட்களில் இவைகளில் பல உதிர்ந்து கீழே விழுந்துவிடும். மீதி இருப்பவை சிறு குரும்பைகள் ஆகும். நாட்கள் செல்லச் செல்லக் குரும்பைகள் பருத்துத் தேங்காயாகும். மட்டைகளுக்கு இடைஇடையே குரும்பைகளும் தேங்காய்களும் குலை குலையாய்த் தொங்கிக் கொண்டு இருக்கும்போது தென்னை பார்வைக்கு வெகு அழகாய் இருக்கும்.

5. தேங்காய்கள் விளைந்ததும் அவைகளை மரத்தில் ஏறிப் பறித்துக் கீழே இறக்குவார்கள். அவைகளைச் சுற்றி இருக்கும் கூந்தலை உரித்து நீக்கிக் காயை எடுத்து உடைத்தால் அதனுள் பருப்பும் நீரும் இருக்கும். இளங் காய்களில் நீர் நிறைந்து இருக்கும்; பருப்பு நன்கு பிடிக்-

காமல் மிக மெல்லியதாய் வழுவழுப்பாயிருக்கும். இவை இளநீர் என்று சொல்லப்படும். விளைந்த காய்களில் தண்ணீர் குறைந்து பருப்பு திண்ண மாய் இருக்கும்.

---

19. தென்னையின் உபயோகம்

முந்திய பாடத்தில் தென்னை பயிர் ஆகும் விதத்தை அறிந்தோம். இனி அதன் உபயோ கங்களைக் கவனிப்போம்.

2. தென்னை தாள் உண்ட நீரை நமக்குத் தலையாலே திரும்பத் தருகிறது. இளநீரை நீங்-கள் குடித்து இருக்கிறீர்களா? அது எவ்வளவு மதுரமாய் இருக்கிறது! வெயில் காலங்களில் வழி நடந்து களைத்து வரும்போது இளநீர் அகப்பட்டால் அதைக் குடித்து எவ்வளவு இன் பம் அடைவீர்கள்! இளநீரில் உள்ள வழுக்கை-யைத் தின்னவும் நீங்கள் மிகுந்த ஆசைப்படு-வீர்கள்.

3. தேங்காய் நம் முக்கிய உணவுப் பொருள் களில் ஒன்று. சுவையில் தித்திப்பாய் இருப்பதால் அதைத் தின்ன யாவரும் விரும்புவார்கள். அதைத் துருவியாவது அரைத்தாவது எல்லா உணவுப் பொருள்களிலும் சேர்க்கிறோம். தேங் காய் சேர்ந்த பதார்த்தங்களோ சுவை மிகும். துருவி வைத்திருக்கும் தேங்காயைச் சிறுவர்கள்

குத்துக் குத்தாய் அள்ளி வாயில் போட்டுக் கொண்டு ஓடி விடுவார்கள்.

4. ஆலயங்களில் இறைவனை வணங்கும் போதும் தேங்காயை உடைத்து அவருக்கு அளிக்கிறோம். கோயில்களில் தேங்காய்களைச் சிதற அடிப்பதைப் பார்த்து இருக்கிறீர்களா? சிதறும் துண்டுகளை எடுக்கச் சிறுவர்கள் எங்கிருந்தாலும் ஒரு நொடியில் வந்து கூடிவிடுவார்கள்.

5. தேங்காயில் எண்ணெய்ச் சத்து மிகுதியும் உண்டு. முற்றின தேங்காய்களுக்குக் கொப்பரை என்று பெயர். கொப்பரைத் தேங்காய்களை உடைத்தால் நீர் சிறிதும் காணப்படாது; திண்ணமான பருப்பு மாத்திரமே இருக்கும். இப்பருப்புகளை எடுத்து உலர்த்தித் துண்டு துண்டாக அரிந்து செக்கில் போட்டு ஆட்டினால் அவைகளிலிருந்து எண்ணெய் வெளிவரும். இத் தேங்காய் எண்ணெய் தின்பண்டங்கள் செய்வதற்கு உபயோகமாகிறது. தேங்காய்ப் பிண்ணாக்கு மாடுகளுக்கு நல்ல உணவு ஆகும்.

6. தேங்காயிலுள்ள இன்னும் இரண்டு பாகங்களும் நமக்குப் பயன்படுகின்றன. அதன் கொட்டாங் கச்சியால் கறி பதார்த்தங்கள் எடுக்கும் அகப்பைகள் செய்யலாம். மேல் இருக்கும் கூந்தலைச் சில நாட்கள் தண்ணீரில் ஊறப் போட்டு

வைத்துப் பிறகு நசுக்கி நார் எடுத்து அதைக் கயிருகத் திரிக்கிருர்கள். இந்தக் கயிறு அதிக வலிமை உள்ளதாகையால் தேர் இழுக்கும் வடமாக உபயோகப்படுகிறது. மற்றும் தண்ணீர் இறைக்கும் கயிருகவும், வீடுகள் பந்தல்கள் கட்டவும், கப்பல்கள் படகுகளில் ஒன்ருேடு ஒன்றை இணைத்துக் கட்டவும், இன்னும் பல காரியங்களுக்கும் இது பயன் படுகின்றது.

7. கோயில்களில் திருநாள் காலங்களிலும் வீடுகளில் திருமணம் முதலிய மங்களகரமான காரியங்கள் நடக்கும்போதும், தென்னை மட்டைகளைக் கொண்டுவந்து பந்தற்கால்களில் அலங்காரத்திற்காகக் கட்டுவார்கள். தென்னையின் குருத்தோலையைக் கண்டால் பிள்ளைகளுக்குக் கொண்டாட்டம் அதிகம். அதைக் கிழித்துக் காப்பு, கிளி, பாம்பு, பிரம்பு முதலிய எண்ணிறந்த விளையாட்டுச் சாமான்கள் செய்து களிப்பார்கள். இன்னும் ஓலையோடுகூடிய மட்டையால் பூக்குடலை செய்யலாம்; கிடுகுகள் பின்னலாம். இக்கீற்றுகள் கூறை வேயவும் பந்தல் போடவும் உபயோகமாகும்.



20. நபிநாள் பண்டிகை

[வீதி வழியே நடந்து வரும் கந்தனும் அவன் தந்தையும் ஒரு மசீதை அணுகுகிறார்கள்.]

கந்தன்:—அப்பா, இங்கே ஏன் இத்தனை கூட்டம்? இம்மசீதுக்கு முகம்மதியர் பெரியோரும் சிறியோரும் பிள்ளைகளுமாகத் திரள் திரளாய் வந்துகொண்டு இருக்கின்றனர். அவர்கள் அழகிய ஆடைகளை அணிந்து இருக்கின்றனர். மசீதும் அழகாய் அலங்கரிக்கப்பட்டு இருக்கிறது. அதன் முன்னே பெரிய பந்தல் போடப்பட்டு இருக்கிறது.

அதில் பூமாலைகள் தொங்குகின்றன. சாம்பிராணி மணம் எங்கும் வீசுகின்றது. பெரிய கம்பத்தில் பிறைச் சந்திரன் உருவத்தோடு கூடிய கொடி ஒன்று கட்டப்பட்டு இருக்கின்றது. இன்று இக்கோயிலில் ஒரு திருநாளா?

தந்தை:—ஆம்; இன்று இங்கு ஒரு திருநாள் தான்.

கந்தன்:—என்ன திருநாள், அப்பா?

தந்தை:—இன்று நபிநாள் பண்டிகை. அதாவது இன்று இம் முகம்மதியரது மதத்தை ஏற்படுத்திய முகம்மதுநபி என்னும் பெரியாரின் பிறந்த நாள். அதை இவர்கள் இவ்வளவு சிறப்பாகக் கொண்டாடுகின்றனர்.

கந்தன்:—அப்பெரியார் யார்? அவர் பிறந்த நாடு எது? அவர் எப்படி முகம்மதிய மதத்தை ஏற்படுத்தினர்?

தந்தை:—சொல்லுகிறேன், கேள்.

முகம்மதுநபி நமது நாட்டிற்கு மேற்கே உள்ள அரேபியா என்னும் தேசத்தில் மெக்கா என்னும் ஊரில் சற்று ஏறக்குறைய ஆயிரத்து நானூறு ஆண்டுகளுக்கு முன் பிறந்தார். அவர் பிறக்கு முன்னமே தன் தந்தையை இழந்தார். ஆருவது வயதில் அவரது தாயும் இறந்தார்.

அதன் பிறகு அவருடைய சிறிய தந்தை அவ-ரைத் தன் வீட்டில் வளர்த்து வந்தார். அவர் ஒரு வர்த்தகர். அவரும் முகம்மதுவும் ஊர் ஊராய்ச் சென்று சரக்குகளை விற்று வருவார்கள். தன் பன்னிரண்டாவது வயதில் முகம்-மது கதிஜா என்னும் ஒரு பணக்காரப் பெண்-ணின் கீழ் வேலையில் அமர்ந்தார். அப் பெண்ணின் ஆளாக அவர் அயல் இடங்களுக்குச் சென்று சரக்குகளை விற்று வியாபாரம் செய்து வந்தார். அவருடைய இருபத்து ஐந்தாம் வயதில் முகம்மதுவும் கதிஜாவும் மணம் புரிந்து கொண்டனர்.

முகம்மது இயற்கையிலேயே கடவுள் பக்தி நிறைந்தவர். கூர்மையான புத்தியும் ஆழ்ந்த சிந்தனையும் உள்ளவர். நியாயம் அநியாயம் நன்கு தெரிந்தவர். அக்காலத்தில் அரேபியா நாட்டில் வாழ்ந்து வந்த மக்களோ கெட்ட வழக்கங்களில் மூழ்கி இருந்தனர். மதுபானம் செய்வதும், பொய் சொல்லுவதும், திருடுவதும், எளியோரையும் தாழ்ந்தோரையும் வருத்துவதும் அவர்களுக்கு வழக்கமாய் இருந்தது. கடவுள் ஒருவர் இருக்கிறார் என்று எண்ணிப் பயபக்தி-யுடன் அவர்கள் தங்கள் வாழ்க்கையை நடத்தவில்லை. இவைகளை எல்லாம் பார்த்து வந்த

முகம்மதுவிற்கு அவர்களைச் சீர்திருத்த வேண்டும் என்ற எண்ணம் மிகுந்தது.

அது போலவே ஒரு நாள் முகம்மது கடவுளைத் தியானம் பண்ணிக்கொண்டு இருக்கும் பொழுது, கடவுள் அவர் முன் தோன்றி அந் நாட்டில் உள்ள மக்களுக்குத் தன்னைப் பற்றிய ஞானத்தைப் போதிக்கும்படி அருள் புரிந்தார்.

அவ்வாறே முகம்மதுவும் அவர்களுக்குத் தன்னுடைய கொள்கைகளை உபதேசம் செய்ய ஆரம்பித்தார். "ஆண்டவர் ஒருவரே. நாள்தோறும் நாம் அவரைத் தொழவேண்டும். எல்லோரையும் அவரே படைத்தார். ஆகையால் நாம் எல்லோரும் சகோதரர். பெரியோர், சிறியோர், பணக்காரர், ஏழை என்று நாம் உயர்வு தாழ்வு பாராட்டக்கூடாது. சிறியவர்களையும், எளியவர்களையும், பெண்பிள்ளைகளையும் நாம் வருத்தப்படுத்தக் கூடாது. ஒருவரோடு ஒருவர் ஒற்றுமையாயும் அன்பாயும் இருக்கவேண்டும். மதுபானம் செய்தல், பொய் பேசுதல், திருடுதல் முதலிய கொடிய செய்கைகளை ஒழிக்கவேண்டும்" என்று முகம்மது அவர்களுக்குப் போதித்தார்.

அரபி மொழியில் கடவுளுக்கு "அல்லா" என்று பெயர். அல்லாவைப் பற்றிப் போதிப்பவருக்கு "நபி" என்று பெயர். ஆகையால்

முகம்மதுவிற்கு இப்போது நபி என்ற பெயர் வழங்கிற்று. முகம்மது நபியின் கொள்கைகளை ஏற்றுக்கொண்டவர் முகம்மதியர் ஆயினர்.

அத்தகைய பெரியாரின் பிறந்த நாளை இம் முகம்மதியர் இன்று இம்மசீதில் கொண்டாடுகின்றனர்.

கந்தன் :—அறிந்து கொண்டேன். இனி இங்கு இவரது பிறந்த நாளை எப்படிக் கொண்டாடுவார்கள் என்று சொல்லுங்கள்.

தந்தை :—முகம்மது நபியின் உபதேசங்கள் அடங்கிய புத்தகத்திற்குக் "குரான்" என்று பெயர். இவர்கள் இன்று மசீதில் குரானை வாசித்து அவருடைய கொள்கைகளை எல்லோருக்கும் புகட்டுவார்கள். அவருடைய சரித்திரத்தையும் எடுத்துச் சொல்லி அவரது புகழை ஓதுவார்கள். மசீதிலும் வீடுகளிலும் ஏழைகளுக்கு உணவு அளிப்பார்கள்.

கந்தன் :—இப்போது எல்லாவற்றையும் தெரிந்து கொண்டேன், அப்பா.



21. மலை தூக்கி

1. "ஆறு மாதம் வரையிலும்
சோறு போடு வீரெனில்

2. எவரும் மகிழ மலைதனை
எடுப்பேன்" என்றான் ஒருவனே!

3. என்ற அவனைச் செல்வனும்
நன்று கொழுக்க வைத்தனன்.

4. மலையை எடுக்கப் போகுநாள்
மனிதர் பார்க்கக் கூடினர்.

5. யாரும் சூழ்ந்து நிற்கவே
சூரன் வந்து சொல்லுவான்:

6. "மலையை எடுக்க நான் தயார்
தலையில் தூக்கி வையுங்கள்,"
7. என்று சொல்ல யாவரும்
நின்று தயங்கிச் சென்றனர்!

---

22. தபால்

கந்தன் :—அப்பா! இதோ ஒரு தபால்காரன் நம் வீட்டை நோக்கி வருகிருன். கையில் ஒரு கடிதமும் கொண்டு வருகிருன்.

தந்தை :—நல்லது. கடிதத்தை வாங்கிக்கொள்.

கந்தன் :—அப்பா! இதோ வாங்கிக்கொண்டேன்.

தந்தை :—யாருக்கு வந்திருக்கிறது என்று பார்.

கந்தன் :—அது எப்படித் தெரியும், அப்பா?

தந்தை :—கடிதத்தில் எழுதியிருக்கும் பெயரையும் விலாசத்தையும் வாசித்துப் பார்.

கந்தன் :—இது என்ன வேடிக்கை! இது எனக்கே வந்திருக்கிறதே!

செல்வன் - கந்தனுக்கு,
7, தெற்கு ரத வீதி,
இரத்தினபுரி.

என்று எழுதியிருக்கிறது.



தந்தை:—சரி. அது எந்த ஊரில் இருந்து வந்திருக்கிறது?

கந்தன்:—அது எப்படித் தெரியும்?

தந்தை.—என்னிடம் கொடு; நான் சொல்லுகிறேன். இது மணி நகரத்தில் இருந்து வந்திருக்கிறது.

கந்தன்:—அது எப்படித் தெரிந்தது, அப்பா?

தந்தை:—இதோ இந்த முத்திரையைப் பார். இதில் மணி நகரம் என்று அனுப்பிய தபால் ஆபீசின் பெயரும், 10-2-35 மாலை 6-மணி

என்று அனுப்பிய தேதியும் நேரமும் ஆங்கிலத்தில் குறிக்கப்பட்டு இருக்கின்றன.

கந்தன்:—அந்த முத்திரையின் அடியில் இருக்கும் சிறு துண்டுத்தாள் என்ன அப்பா? அதில் நமது மன்னர் படம் இருக்கிறதே!

தந்தை.—ஆம்; அது நமது அரசர் தலையின் படமே. அதற்கு 'ஸ்டாம்பு' என்று பெயர். அது தபால் ஆபீசில் விற்கப்படும். அதன் விலை ஓர் அணு ஆகும். அதை வாங்கி இக்கடிதத்தில் ஒட்டவேண்டும்.

கந்தன்:—இல்லாவிட்டால்?

தந்தை:—இல்லாவிட்டால் கடிதத்தை அனுப்ப மாட்டார்கள். அது கடிதத்தை இங்கே கொண்டு வந்து சேர்ப்பதற்குக் கொடுக்க வேண்டிய கூலி ஆகும். எழுத வேண்டிய செய்தி கொஞ்சமே இருந்தால் முக்கால் அணுக்கொடுத்து ஒரு கார்டு வாங்கி எழுதிக்கொள்ளலாம். அதிகமாக இருந்தால் ஒரு தாளில் எழுதி இம்மாதிரி ஓர் உறையில் போட்டு ஓர் அணு ஸ்டாம்பு ஒட்ட வேண்டும். அல்லது ஓர் அணு கொடுத்துத் தபால் ஆபீசில் ஓர் உறை வாங்கிக்கொள்ளலாம். அதற்கு வேறு ஸ்டாம்பு ஒட்ட

வேண்டியதில்லை. அதிலேயே நம் மன்னர் தலையின் படம் அச்சில் பதிப்பிக்கப்பட்டு இருக்கும்.

கந்தன் :—நல்லது, அறிந்துகொண்டேன். இதோ இரண்டாவது முத்திரை ஒன்று இருக்கிறதே; இது என்ன அப்பா ?

தந்தை :—இது இவ்வூர்த் தபால் ஆபீசின் முத்திரை. இங்கு வந்து சேர்ந்த தேதியும் நேரமும் இதில் ஆங்கிலத்தில் குறிக்கப் பட்டு இருக்கின்றன.

கந்தன் :—சரி, அப்பா. உள்ளிருக்கும் கடிதத்தை வாசிக்க ஆவலாய் இருக்கிறது. அதைப் பார்க்கலாமா ?

தந்தை :—இதோ. உறையை இந்த ஓரத்தில் கிழித்துக் கடிதத்தை வெளியே எடுத்து வாசி.

---

23. கடிதம் எழுதுதல்

கந்தன் :—அப்பா! நேற்று மாமா அவர்களிடம் இருந்து வந்த கடிதத்திற்குப் பதில் அனுப்ப வேண்டும் என்று விரும்புகிறேன்.

தந்தை :—அப்படியே செய். பதில் எழுதி என்னிடம் காட்டு.

கந்தன் :—இதோ எழுதி இருக்கிறேன். அப்பா. மாமா கடிதத்தையும் என்னுடைய பதிலையும் வாசிக்கின்றேன்; கேளுங்கள்.

மாமாவின் கடிதம் :—

16, பெரிய கடைத் தெரு,
மணி நகரம்.
10-2-1935.

என் அன்பு மிகுந்த
செல்வன் கந்தனுக்கு,

இறைவன் அருளால் எல்லா நன்மைகளும் உண்டாகுக! இங்கே நாங்கள் யாவரும் நலமாய் இருக்கிறோம். அங்கே நீயும், உன் தம்பி மணியும், உன் அக்காள் கமலமும், உன் அன்னையும், தந்தையும் உடல் நலத்துடன் இருக்கிறீர்கள் என்று நம்புகிறேன்.

நீயும் கமலமும் நன்றாய்ப் படித்து வருகிறீர்களா? அரை வருடப் பரீட்சையில் திருப்திகரமாக விடை அளித்தீர்களா? எத்தனை பாடங்களில் முதலாவதாக வந்தீர்கள்? மணி இப்பொழுது நன்றாய் விளையாடுகிறானா? பதில் எழுது.

உனது அன்பு மிக்க
நாயகம்.

என்னுடைய பதில் :—

7, தெற்கு ரத வீதி,
இரத்தினபுரி.
12-2-35.

அன்பு நிறைந்த மாமா அவர்களுக்கு,
என்னுடைய வந்தனம்.

உங்கள் கடிதம் நேற்றுக் கிடைத்தது. நாங்கள் யாவரும் நலமாய் இருக்கிறோம். மணி இப்பொழுது நன்றாய் விளையாடுகிறான். அக்காளும் நானும் நன்றாய்ப் படித்து வருகிறோம். சென்ற அரைவருடப் பரீட்சையில் இருவரும் அவரவர் வகுப்பில் ஒவ்வொரு பாடத்திலும் முதல் பிள்ளையாக வந்தோம். அங்கு அத்தான், அத்தை, நீங்கள் முதலிய யாவரும் சுகமாய் இருக்கிறீர்களா?

அத்தானுக்கு எப்போது வருடாந்திரப் பரீட்சை நடந்து விடுமுறை ஆரம்பிக்கும்?

உங்கள் அன்புள்ள
கந்தன்.

தந்தை :—நல்லது. கடிதத்திற்கு ஓர் உறையில் மேல் விலாசம் எழுதி இருக்கிறாயா?

கந்தன் :—ஆம், அப்பா! இதோ வாசிக்கிறேன்.

திருவாளர்

நாயகம் அவர்களுக்கு,
16, பெரிய கடைத் தெரு,
மணி நகரம்.

தந்தை :—சரி, கடிதத்தை உறையில் போட்டு என்னிடம் கொடு. அதைத் தபால் ஆபீசிற்கு அனுப்பி விடுகிறேன்.

கந்தன் :—இல்லே, அப்பா! நானே குருசாமியுடன்போய்த் தபாலாபீசில் இதைப் போட்டு விட்டு வருகிறேனே? தபாலாபீசைப் பார்க்க எனக்கு அதிக விருப்பமாய் இருக்கிறது. நான் போய் வரலாமா?

தந்தை :—சரி, அப்படியே செய். குருசாமி! இருவரும் போய் வாருங்கள்.

---

24. தபாலாபீசு

கந்தன் :—அப்பா! தபாலாபீசில் கொண்டு போய்க் கடிதத்தைப் போட்டுவிட்டோம். அங்கே கடிதங்களே என்ன செய்கிருர்கள் என்பதையும் பார்த்துவிட்டு வந்தோம்.

தந்தை:—அப்படியா! அங்கே நீங்கள் கண்டதைச் சொல்; கேட்கிறேன்.

கந்தன்:—அப்பா! நாங்கள் இருவரும் போய்த் தபாலாபீசின் வெளிச்சுவரில் வைத்திருக்கும் துவாரத்தின் வழியாய்த் தபால்பெட்டியில் கடிதத்தைப் போட்டோம். அது தபால் எடுக்கும் நேரமாம். நாங்கள் வீட்டுக்குத் திரும்புமுன் ஒரு தபால் வேலைக்காரன் அப்பெட்டியைத் திறந்து கடிதங்களை எல்லாம் வெளியே எடுத்தான். பிறகு அவைகள் ஒவ்வொன்றிலும் ஸ்டாம்பின்மேல் முத்திரை அடித்தான். அது முடிந்ததும் அவைகள் எல்லாம் ஒரு பெரிய பையில் போடப்பட்டன. பின்பு பையைக் கட்டிக் கட்டின கயிற்றின் முடிச்சில் அரக்கை உருக்கி வைத்து முத்திரை குத்தப்பட்டது. இன்னும் சிறிது நேரம் இருந்து பார்த்தோம். பிறகு வேறு ஒருவன் பையை எடுத்துத் தோளில் போட்டுக்கொண்டு இரயில்வண்டி நிலையத்திற்குச் சென்றான். அங்கே அவன் அதைப் புகை வண்டி வந்ததும் கொடுத்துவிடுவானும். அதன் பின் என்ன நடக்கும் என்று எனக்குச் சொல்லுங்கள், அப்பா!


LETTERBOX
POST OFFICE

தந்தை :—நல்லது. சொல்லுகிறேன்; கேள். தபால் பையை அம் மனிதன் புகைவண்டி வந்ததும் அதில் சேர்ந்திருக்கும் ஒரு தபால் வண்டியில் இருக்கும் அதிகாரியிடம் கொடுப்பான். அவர் முடிச்சை அறுத்துப் பையில் இருக்கும் கடிதங்களை வெளியே எடுப்பார். அவைகளின் மேல்விலாசத்தைப் பார்த்து வெவ்வேறு ஊர்களுக்குப் போகவேண்டிய கடிதங்களை வேறுவேருகத் தன் முன்னே இருக்கும் பெட்டியிலுள்ள அறைகளில் போடுவார். இரயில்வண்டி வந்து நிற்கும் ஊர்கள் ஒவ்வொன்றிலும் இவ்வாறே தபால் பைகளை வாங்கிக் கடிதங்களைப் பிரித்து வைத்துக்கொள்வார். இது போலவே அந்த அந்த ஊர்களுக்கு உள்ள கடிதங்களைத் தனித் தனியாகப் பையில் போட்டுக் கட்டி முத்திரை வைத்து, பை கொண்டுவருபவன் இடம் கொடுத்து விடுவார். அவன் அதைத் தபாலாபீசுக்குக் கொண்டுபோய்ச் சேர்ப்பான்.

கந்தன் :—அதன் பின் அப் பையைத் தபாலாபீசில் என்ன செய்கிருர்கள் என்பது எனக்குத் தெரியும். நான் அதைப் பார்த்திருக்கிறேன்.

தந்தை :—என்ன செய்கிருர்கள்? சொல்.

கந்தன்:—பையை உடைத்துக் கடிதங்களை வெளியே எடுக்கிறார்கள். பிறகு அவை ஒவ்வொன்றிலும் தங்கள் ஆபீசின் முத்திரையை அடித்துத் தபால்காரனிடம் கொடுக்கிறார்கள். அவன் அவைகளைக் கொண்டுபோய் அவைகளில் எழுதியிருக்கும் விலாசத்தார்களிடம் சேர்க்கிறான்.

தந்தை:—ஆம், இவ்வளவுதான் கடிதங்களைப் பற்றிய அளவில் தபாலாபீசில் செய்யும் வேலை. அந்த ஆபீசில் நடக்கும் இதர வேலைகளைப் பற்றி உனக்கு இன்னொரு நாள் சொல்லுகிறேன்.

25. சுந்தரமூர்த்தி நாயனார்—I

பிள்ளைகளே, தேவாரம் எனப்படும் பக்தி மிகுந்த இனிய பாடல்களை இறைவர்மீது பாடி அருளிய திருநாவுக்கரசைப்பற்றி நீங்கள் முன்னமே படித்து இருக்கிறீர்கள். அத்தகைய திருப்பதிகங்களைப் பாடி அருளிய மற்றொரு பெரியார் சுந்தரமூர்த்தி நாயனார். அவருடைய கதையை இப்போது படிப்போம்.

2. சுந்தரர் திருநாவலூர் என்னும் ஊரில் சிவபக்தியில் சிறந்த ஓர் ஆதிசைவ அந்தணர் குலத்தில் பிறந்தனர். இவரது தாய் தந்தையர்

இவருக்கு நம்பி ஆரூரர் என்று பெயரிட்டு இவரைச் சீராட்டிப் பாராட்டி வளர்த்து வந்தனர்.

3. ஆரூரரும் நாளொரு மேனியும் பொழுதொருவண்ணமும் ஆக வளர்ந்து வந்து, கலைகள் பலவும் கற்றுத் தேர்ந்து, திருமணப் பருவத்தை அடைந்தார். மணம் உறுதி செய்யப்பட்டது.

4. அத் திருமண நாளன்று அரும்பெரும் சம்பவம் ஒன்று நடந்தது. மாப்பிள்ளை மணக்கோலத்துடன் குதிரை மேல் ஏறிப் புறப்பட்டுப் பெண்வீடு வந்து சேர்ந்து திருமணப்பந்தரில் அமர்ந்தார். மணச் சடங்குகளை நடத்துவதற்கு யாவரும் வந்து கூடி இருந்தனர். அக்காலையில் ஒரு கிழவர், தண்டு ஊன்றித் தளர்நடை நடந்து வந்து, அங்கே கூடியிருந்த சபையோரை நோக்கி, “ஐயன்-மீர்! இந்த ஆரூரனுக்கும் எனக்கும் ஒரு பெரு வழக்கு இருக்கின்றது. அதைத் தீர்த்துவிட்டே நீங்கள் இக் கலியாணச் சடங்குகளை நடத்தவேண்டும்” என்றனர்.


சுந்தரர்

5. "அவ்வழக்கு என்ன?" என்று யாவரும் மிக்க ஆச்சரியத்துடன் கேட்க, வயோதிகர் "இந்த ஆரூரன் எனக்கு அடிமை" என்று கூறி-னர். ஆரூரர் நகைத்து, "ஓர் அந்தணருக்கு மற்-ருேர் அந்தணர் அடிமை ஆதலும் உண்டோ? நீர் பித்தனே!" என்றனர். பெரியவர் இந்த இழிவு மொழியைச் சிறிதும் பொருள் படுத்தாது, "சபையோர்களே, இவனுடைய பாட்டனர் எனக்கு எழுதிக்கொடுத்த அடிமைச்சீட்டு இதோ இருக்கின்றது, பாருங்கள்" என்று ஓர் ஓலைச் சுருளைக் கையில் எடுத்து நீட்டினர். ஆரூரர் பெருஞ் சினங்கொண்டு, "அந்தணர் அடிமை ஆதல் என்ன முறை?" என்று கூவி அதனை விரைந்து பிடுங்கிக் கிழித்து எறிந்தார்.

6. கிழவர் "ஓ" என்று அலறி, "இவன் செய்கை நியாயம் தானே! இதனுலேயே இவன் அடிமை என்பதைத் தானே காட்டிவிட்டான் அல்லவா! இருக்கட்டும், நான் இங்கே கொண்டு வந்த ஓலை நகல் ஓலையே. மூல ஓலையை என் ஊர் ஆகிய திருவெண்ணெய்நல்லூரில் உள்ள அந்-தணர் சபைமுன் காட்டி இவன் என் அடிமை என்பதை நிலைநிறுத்துவேன்" என்று கூறி அவ்வூரை நோக்கி நடந்தார்.

———

26. சுந்தரமூர்த்தி நாயனர் II

வயோதிகர் இவ்வாறு திருமணப் பந்தரை விட்டு அகலவும், நம்பி ஆரூரரும் மற்றும் யாவரும் அவரைப் பின் தொடர்ந்து அருகில் உள்ள அத் திருவெண்ணெய் நல்லூரை அடைந்தனர்.

2. அங்கே கிழவர் அந்தணர் சபைமுன் சென்று தன் வழக்கைச் சொல்லி அடிமைச் சீட்டின் மூல ஓலையையும் காட்டினர். அதனைப் படித்துப் பார்க்கவும், அதில் "திருநாவலூரில் இருக்கும் ஆதிசைவன் ஆகிய ஆரூரன் என்கிற நானும் என் சந்ததியாரும் திருவெண்ணெய் நல்லூரில் உள்ள பித்தனுக்கு வழிவழித் தொண்டு செய்ய ஒப்புக்கொண்டு நான் இவ்வோலையை எழுதிக்கொடுத்தேன்" என்று ஆரூரரின் பாட்டனர் கையெழுத்தில் குறிக்கப்பட்டு இருந்தது. அதன்மேல் சபையோர் ஆரூரரை நோக்கி, "இனி நீர் தப்ப வழி இல்லை, இவருக்கு அடிமை செய்வதே முறை" என்றனர். ஆரூரரும், "விதி இதுவே ஆயின் நான் இசையேன் என்று சொல்ல முடியுமா?" என்று கூறி நின்றார்.

3. பிறகு யாவரும் வழக்கு வென்ற பெரியாரைப் பார்த்து, "உமது வீடு எங்கு உளது?" எனவும், கிழவர் அவர்கள் யாவரும் பின்

தொடர்ந்து வரத் திருவருள் துறை என்னும் கோயிலுக்குள் புகுந்து மறைந்தார். எங்கும் தேடியும் அவரைக் காணுமல் யாவரும் திகைத்து நின்றனர். அப்போது இறைவர் ஆரூரார்முன் தோன்றி, "உலக இன்பங்களிலே மூழ்கி மயங்கி என்னை மறந்துவிடா வண்ணம் உன்னைத் தடுத்து ஆட்கொண்டவன் யானே" என்று அறிவித்தார். ஆரூரார் ஆநந்தக் கடலிலே மூழ்கினவராய் உள்ளம் உருகத் திருவருளை வியந்து இறைவனைத் தொழுது நின்றனர். சிவபெருமான், "இனி நீ என்னைச் செந்தமிழ்ப் பாடல்கள் பாடித் துதித்து வருவாயாக! முன்னம் என்னோடு வழக்கிடும்போது என்னைப் பித்தன் என்று கூறினுய். ஆதலால் என்னைப் பித்தன் என்றே ஆரம்பித்துப் பாடுக!" என்று கட்டளை இட்டனர். அவ்வாறே சுந்தரரும், "பித்தா பிறை சூடி" என்னும் திருப் பதிகத்தைப் பாடினர்.

4. பின்னர், சுந்தரர், சிவபெருமானிடம் அளவு கடந்த அன்பு கொண்டவராய், அவர் எழுந்தருளி இருக்கும் தலங்கள் தோறும் சென்று அவரை வணங்கிப் பல திருப்பதிகங்கள் பாடி வந்தார். இறைவன் திருவருள் கொண்டு அவர் அவ்வப்போது பல அற்புதங்களையும் செய்து வந்தார்.

5. ஒருகால் காவிரி ஆற்றில் கரை புரண்டு வெள்ளம் ஓடும்போது, சுந்தரர் மறு கரையில் உள்ள திருவையாறு சென்று இறைவனை வணங்க இச்சைகொண்டு பதிகம் பாட, வந்த வெள்ளம் அப்படியே அணை போட்டதுபோல நின்றது. சுந்தரரும் அவரைத் தொடர்ந்த அடியார்களும் மணல் வழியே நடந்து சென்று திருவையாற்றை அடைந்து கடவுளை வணங்கினர்.

6. மற்ருெரு சமயம் சுந்தரர் திருப்புக்கொளியூர் அவிநாசி என்னும் பதியில் செல்லுகையில் ஒரு வீட்டில் பெரும் அழுகுரல் கேட்டது. அவ்வீட்டில் இருந்தோர் அருகே உள்ள குளத்தில் குளிக்கச் சென்ற தன் மகனை முதலை பிடித்து விழுங்கியதாகச் சொல்லி வருந்தினர்.



சுந்தரர் மிக்க இரக்கமுற்று அக்குளத்தில் அணுகி இறைவனை வணங்கி ஒரு திருப்பதிகம் பாடினர். "கரைக்கான் முதலையைப் பிள்ளை தரச் சொல்லு" என்று நாலாவது திருப்பாட்டை முடிக்குமுன் முதலை கரைக்கு வந்து பிள்ளையை உமிழ்ந்து சென்றது.

உடனே பெற்றோர்கள் ஓடித் தம் புதல்வனை வாரி எடுத்து நாயனாரின் அடிகளில் விழுந்து பணிந்தனர். சுந்தரரும் அவர்கள் எல்லோருடன் திருக்கோயில் சென்று அவிநாசி அப்பரை வணங்கிப் பின் பிற தலங்களுக்குச் சென்றனர்.

---

27. நம் தாய் நாடு

இந்தியா நம் தாய்நாடு. இது தெற்கே குமரி முனையில் இருந்து வடக்கே இமயமலைத் தொடர் வரையும் பரந்து இருக்கும் பெரிய நாடு. சிந்து, கங்கை, பிரமபுத்திரா, நர்மதை, கோதாவரி, கிருஷ்ணா, காவிரி முதலிய ஜீவ நதிகள் பாயப் பெற்ற வளநாடு. பண்டு தொட்டுப் பல பெரிய வேந்தரும், வீரரும், பக்தரும், புலவரும் பிறந்து வாழ்ந்துவந்த புகழ்நாடு. இந்துக்கள், முகம்மதியர், பார்சியர், கிறிஸ்தவர் என்னும் இந்தியத் தாயின் மக்கள் யாவரும் கூடி வாழ்ந்திடும் நன்னாடு.

2. இதன் தென்கிழக்குப் பாகம் நம் செந்தமிழ் நாடு. இது பாலாறு, தென்பெண்ணை, காவிரி, வைகை, பொருனை முதலிய பெரிய நதிகள் பாய்ந்து ஓடும் செழிப்புள்ள நாடு. கல்வியிற் சிறந்த கம்பர், திருவள்ளுவர் முதலிய



பெரும் புலவர்கள் பிறந்த தாய் நாடு. இவர்கள் இயற்றிய அழியாப் புகழ் நூல்களின் மணம் பார் எங்கும் வீசும் திருநாடு.

பாட்டு

1. செந்தமிழ் நாடெனும் போதினிலே—
இன்பத்
தேன் வந்து பாயுது காதினிலே—எங்கள்
தந்தையர் நாடென்ற பேச்சினிலே—ஒரு
சக்தி பிறக்குது மூச்சினிலே.

2. காவிரி தென்பெண்ணை பாலாறு—தமிழ்
கண்டதோர் வையை பொருனைநதி—என
மேவிய யாறு பல ஓடத்—திரு
மேனி செழித்த தமிழ் நாடு.

3. கல்வி சிறந்த தமிழ் நாடு—புகழ்க்
கம்பன் பிறந்த தமிழ் நாடு—நல்ல
பல்வித மாயின சாத்திரத்தின்—மணம்
பாரெங்கும் வீசுந் தமிழ் நாடு.

4. வள்ளுவன் தன்னை உலகினுக்கே—தந்து
வான் புகழ் கொண்ட தமிழ் நாடு—நெஞ்சை
அள்ளும் சிலப்பதி காரமென்ருேர்—மணி
யாரம் படைத்த தமிழ் நாடு.

—பாரதியார்.

28. படை வீரர்

பிள்ளைகளே! நீங்கள் படை வீரர்களைப் பார்த்து இருக்கிறீர்களா? இவன் ஒரு படைவீரன்.

இவனது உடையை உற்றுப் பாருங்கள். இவன் தோளில் சாத்திக் கையில் பிடித்து இருப்பது ஒரு துப்பாக்கி. இடுப்பில் இருந்து உறையினுள் நீண்ட கூரிய கத்தி ஒன்று தொங்குகின்றது. இவை படைவீரருக்கு உரிய ஆயுதங்கள்.

2. இவனைப்போல ஆயிரக்கணக்கான வீரர்கள் சேர்ந்து ஒரு படை ஆகும். படைகள் பல வகைப்படும். முற்காலத்தில் நம் நாட்டு வேந்தர்கள் தேர்ப்படை, யானைப்படை, குதிரைப்படை, காலாள்படை என நான்கு விதமான சேனைகளை வைத்து இருந்தார்கள். இக்காலத்தில் அரசர்கள் காலாட்படை, குதிரைப்படை, பீரங்கிப்படை, கப்பல்படை, ஆகாய விமானப்படை முதலிய அநேக விதமான சேனைகளை வைத்து வருகிறார்கள். இவ்வீரன் காலாள் படையைச் சேர்ந்தவன்.

3. இப்படை வீரர்கள் ஆண்மை மிகுந்தவர்கள்; அச்சம் தவிர்த்தவர்கள், என்ன ஆபத்து வரினும் பின்னடையாத மனத் துணிவு உடையவர்கள்.

4. படை வீரர்கள் செய்யும் வேலை என்ன என்று உங்களுக்குத் தெரியுமா? அவர்களே நம் தாய் நாட்டைப் பகைவர்கள் ஒரு தீங்கும் இழைக்காமல் காப்பவர்கள்; நம்மையும், நம் வீடுகளையும் பொருள்களையும் பாதுகாப்பவர்கள். எக்காலத்திலேனும் பகைவர்கள் நம் நாட்டின்மீது படையெடுத்து வந்தால் இப்படைவீரர்கள் அவர்களைத் தடுத்து நின்று தாக்கி அவர்களுடன் கடும்போர் புரிந்து அவர்களைப் புறங்காட்டி ஓடச் செய்வார்கள்; எதிரிகளின் ஆயுதங்களுக்கு அஞ்சாது நின்று சண்டை செய்து, தம் மார்பில் காயம் பட்டேனும், போரில் தம் உயிரை விட்டேனும், பகைவர்களுக்கு இடங்கொடாது தாய் நாட்டிற்கு வெற்றியைக் கொடுப்பார்கள். ஆ! தம் தாய் நாட்டிற்காக இவ்வீரர்கள் செய்யும் ஊழியம் எவ்வளவு சிறந்தது!

5. தொன்றுதொட்டு நம் நாட்டில் இத்தகைய போர்வீரர் பல்லாயிரக் கணக்கானவர் வாழ்ந்து வந்திருக்கின்றனர். அவர்களைப் பற்றி நாம் தேச சரித்திரங்களிலும் கதைகளிலும் படிக்கிறோம். பண்டைக்காலத்து நம் தமிழ்நாட்டு

வீரர்களின் செய்கைகள் நம் பழந்தமிழ் நூல்களில் இருந்து தெரிகின்றன.

6. அவர்களின் தாய்மார்களும் வீரத் தாய்மார்களாய் இருந்தனர். தாய்நாட்டைக் காப்பதே தன் மகனின் முதல் கடமை என்று தெளிந்து ஒரே அருமை மகனை உடைய அன்னையும் அம் மகனை மகிழ்வுடன் போர்க்களத்திற்கு அனுப்புவாள். போர் முனையில் அவன் வெற்றி அடைந்தாலும் அல்லது பகைவருக்கு இடங்கொடாது நின்று இறந்தாலும் அத்தாய் பெருமகிழ்வு அடைவாள்.

7. போர்க்களத்தில் தன் மகன் இறந்தான் என்று அறிந்தால், அத்தாய் கேட்பது "காயம் மார்பிலா அல்லது முதுகிலா?" என்பது ஒன்றேயாம். இக்கேள்வியின் பொருள் என்ன என்று உங்களுக்கு விளங்குகின்றது அல்லவா? அதாவது பகைவனை எதிர்த்து நின்று அவனுக்கு இடங்கொடாது போர் புரிந்து மாண்டானா அல்லது பேடியைப்போலப் பயந்து ஓடிப் பகைவரால் பின் தொடர்ந்து கொல்லப்பட்டானா என்பதேயாம். "காயம் மார்பில்" என்றால் அத் தாய் அம்மகனைப் பெற்ற பொழுதினும் மிகுந்த மகிழ்ச்சி அடைவாள். "காயம் முதுகில்" என்றால் அவள் கடும் சினம் கொண்டு "ஆ! இத் துரோகியைப் பெற்ற இப் பாழ் வயிறும் அவ-

னுக்குப் பால் கொடுத்த இப்பொல்லா மார்பும் இருந்து என்ன பயன்!'' என்று புலம்பி வருந்து-வாள். ஆ! அக்காலத்துத் தாய்மார்களின் வீரத் தன்மையை என்ன என்று உரைப்பது!

---

29. கடவுள் வாழ்த்துப் பாக்கள்

கலைமகள் சிந்தனை

புத்தகத் துள்ளுறை மாதே!
பூவில் அமர்ந்துறை வாழ்வே!
வித்தகப் பெண்பிள்ளை நங்காய்!
வேதப் பொருளுக் கிறைவீ!
முத்தின் குடையுடை யாளே!
மூவுல குந்தொழு தேவீ!
எக்கா லும்உனைத் தொழுவோம்!
எழுத்தறி புத்தி பண்ணிவைப்பாய்!

முருகர் காலைப்பாட்டு

1. வாரும் வாரும் தெய்வ
வடிவேல் முருகரே!
வள்ளி மணாளரே வாரும்;
புள்ளி மயிலோரே வாரும்.

2. பொழுது விடிந்தது
பொற்கோழி கூவிற்று
பொன்னான வேலரே வாரும்;
மின்னார் முந்நூலரே வாரும்.

3. அருணன் உதித்தனன்
அன்பர்கள் சூழ்ந்தனர்
ஆறுமுகத் தோரே வாரும் ;
மாறிலகத் தோரே வாரும் !

—இராமலிங்கசுவாமிகள் திரு அருட்பா.

சிவபெருமான்

1. பித்தா ! பிறை சூடி ! பெரு
மானே ! அருளாளா !
எத்தான் மறவாதே நினைக்-
கின்றேன் மனத் துன்னை
வைத்தாய் ; பெண்ணைத் தென்பால் வெண்
நல்லூர் அருள் துறையுள் [ணெய்
அத்தா ! உனக் காளாய் இனி
அல்லேன் என லாமே !

2. பொன்னார் மேனியனே !
புலித்தோலை அரைக்கசைத்து
மின்னார் செஞ்சடைமேல்
மிளிர் கொன்றை அணிந்தவனே !
மன்னே ! மாமணியே !
மழபாடியுள் மாணிக்கமே !
அன்னே உன்னை அல்லால்
இனி யாரை நினைக்கேனே !

—சுந்தரமூர்த்திசுவாமிகள் தேவாரம்.

திருமால்

கங்கையின் புனித மாய
காவிரி நடுவுபாட்டு
பொங்குநீர் பரந்து பாயும்
பூம்பொழில் அரங்கம் தன்னுள்
எங்கள் மால், இறைவன்,
ஈசன், கிடந்ததோர் கிடக்கைகண்டும்
எங்ஙனம் மறந்து வாழ்கேன்,
ஏழையேன், ஏழையேனே !

—தொண்டரடிப்பொடி ஆழ்வார் திருவாய்மொழி

போது

உடம்பளித்தாய், உயிரளித்தாய்,
உணர்வளித்தாய், உறவளித்தாய் ;
உயிர் வாழ்தற்கே
இடம்படைத்தாய், பொருள் படைத்தாய்,
எண்ணுவதை இயற்ற என்னுள்-
ளிடத்தில் மெய்யில்
திடம் படைத்தாய், ஐம்பொறியின்
திறம் படைத்தாய், மறைந்து
உனையே தேட வைத்தாய் ;
கடம் படைத்த கருணையினாய்,
கருதின் உனக்கு எந்நன்றி
காட்டுவேனே !

—திரு. இலட்சுமண பிள்ளை.

30. கொன்றை வேந்தன்

(ஔவையார் அருளிச்செய்தது)

கொன்றைவேந்தன் செல்வன் அடிஇணை
என்றும் ஏத்தித் தொழுவோம் யாமே.

1. அன்னையும் பிதாவும் முன் அறி தெய்வம்.
2. ஆலயந் தொழுவது சாலவும் நன்று.
3. இல்லறம் அல்லது நல்லறம் அன்று.
4. ஈயார் தேட்டைத் தீயார் கொள்வர்.
5. உரவோர் என்கை இரவா திருத்தல்.
6. ஊருடன் பகைக்கின் வேருடன் கெடும்.
7. எண் ணும் எழுத்தும் கண் எனத் தகும்.
8. ஏவா மக்கள் மூவா மருந்து.
9. ஐயம் புகினும் செய்வன செய்.
10. ஒத்த இடத்து நித்திரை கொள்.
11. ஓதாதார்க் கில்லை உணர்வொடு ஒழுக்கம்.
12. ஔவியம் பேசுதல் ஆக்கத்திற் கழிவு.
13. அஃகமும் காசும் சிக்கெனத் தேடு.
14. கீழோர் ஆயினும் தாழ வுரை.
15. கெடுவது செய்யின் விடுவது கருமம்.
16. கேட்டில் உறுதி கூட்டும் உடைமை.
17. கைப்பொருள் தன்னின் மெய்ப்பொருள் கல்வி.
18. சான்றோர் என்கை ஈன்றோர்க்கழகு.
19. சீரைத் தேடின் ஏரைத் தேடு.

20. சூதும் வாதும் வேதனை செய்யும்.
21. சோம்பர் என்பவர் தேம்பித் திரிவர்.
22. தந்தை சொல் மிக்க மந்திரம் இல்லை.
23. தாயிற் சிறந்ததொரு கோயிலும் இல்லை.
24. திரை கடல் ஓடியும் திரவியம் தேடு.
25. தீராக் கோபம் போராய் முடியும்.
26. தேடா தழிக்கில் பாடாய் முடியும்.
27. தொழுதூண் சுவையின் உழுதூண் இனிது.
28. தோழ ரோடும் ஏழைமை பேசேல்.
29. நல்லிணக்கம் அல்லது அல்லல் படுத்தும்.
30. நாடெங்கும் வாழக் கேடொன்றும் இல்லை.
31. நீரகம் பொருந்திய ஊரகத் திரு.
32. நுண்ணிய கருமமும் எண்ணித் துணி.
33. பாலோ டாயினும் காலம் அறிந் துண்.
34. புலையும் கொலையும் களவும் தவிர்.
35. பையச் சென்றால் வையம் தாங்கும்.
36. மாரி அல்லது காரிய மில்லை.
37. முற்பகல் செய்யில் பிற்பகல் விளையும்.
38. மூத்தோர்சொல் வார்த்தை அமிர்தம்.
39. மேழிச் செல்வம் கோழை படாது.
40. வானம் சுருங்கில் தானம் சுருங்கும்.
41. ஊக்கம் உடைமை ஆக்கத்திற் கழகு.

The Jupiter Press, Madras.

தமிழ்ப் பாட புத்தகங்கள்

முதற் பாட புத்தகம்	விலை அணா	2½
இரண்டாம் பாட புத்தகம்	,,	3
நான்காம் பாட புத்தகம்	,,	5
ஐந்தாம் பாட புத்தகம்	,,	

சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிடெட்,
6, பவளக்காரத் தெரு, சென்னை.